பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 02 சனிக்கிழமை (18.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 234

## சர்வதேச நெறிமுறைகளை நிறைவு செய்யும் வரை

# இலங்கைக்கு கடன் உதவி வழங்க அமெரிக்கத் தரப்பிலிருந்து எதிர்ப்பு

### நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தில் விவரிப்பு

கொழும்பு, ஜூலை 18

**சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குக் கடனுதவி வழங்குவதை அமெரிக்க திறைசேரி அமைச்சர் முழுமையாகத் தடுக்க வேண்டுமென விரைவில் நிறைவேற்றப்படவிருக்கும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

- இத்தகவலை இணையத்தளங்கள் வெளியிட்டுள்ளன. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை இலங்கை, சர்வதேச தரத்திற்கு அமைய நடத்துகின்றது என்பதையும், அவர்களது நடமாட்டச் சுதந்திரத்தை உறுதி செய்துள்ளது என்பதையும் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் உறுதி செய்து - உத் தரவாதம் அளிக்கும் வரை இலங்கைக்குக் கடனுதவி வழங்குவதற்குத் திறைசேரி அமைச்சு அனுமதியளிக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கம், நீதியை உரிய முறையில் கடைபிடித்தல் மற்றும் அரசமைப்பின்

(15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுமாறு மஹிந்தவிடம் மன்மோகன் வலியுறுத்து

### இல்லையேல் இந்திய – இலங்கை உறவில் தாக்கம் வரும் எனச் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 16

இலங்கைத் தமிழர் பிரச்சினை இலங்கை - இந்திய உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஜனாதிபதியிடம் தாம் வலியுறுத்தியதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

எகிப்தில் நடைபெற்ற அணிசேரா நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பிய மன்மோகன் சிங் இந்தத் தகவலை நேற்று இந்திய நாடாளுமன்றத்தில்

(16ஆம் பக்கம் பார்க்க)



## நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 18

அணிசேரா நாடுகளின் 16ஆவது உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக எகிப்துக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

அணிசேரா அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் 118 நாடுகளின் தலைவர்கள் கலந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் அவசரப் பயணிகளுக்கு பயண அனுமதி வழங்குவதில் கால தாமதத்தைத் தவிர்க்க முடியுமா?

### விநாயகமூர்த்தியின் மனுவை ஒட்டி அரசிடம் நீதிமன்றம் கேள்வி

கொழும்பு, ஜூலை 18

யாழ். குடாநாட்டிலிருந்து மரணவீடு, அவசர நோய்ச் சிகிச்சை, நேர்முகப் பரீட்சைகள் போன்றவற்றுக்காக குடாநாட்டை விட்டு அவசரமாகப் பயணிக்கும் பயணிகளுக்குப் பாதுகாப்பு அனுமதி வழங்கும் விடயத்தில் கெடுபிடியைத் தளர்த்தி, காலதாமதப்படுத்தாமல் - இழுத்தடிக்காமல் - அதனை வழங்க முடியுமா என்பதை அரசுத் தலைமையுடன் ஆலோசித்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.படைகளின் புதிய தளபதியாக 23 முதல் மேஜர் ஜெனரல் சில்வா பதவியேற்பார்

### நகர கொமடோராக கேணல் ஹேமந்த

கொழும்பு, ஜூலை 18

புதிய இராணுவத் தளபதியாக லெப்டினட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா பதவி ஏற்றதைத் தொடர்ந்து இராணுவ உயர்மட்டப் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்களின் பிரகாரம் யாழ்.படைகளின் தளபதியாக பணியாற்றிவரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்., வவுனியாவில் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பாகப் பணிபுரிய ஆவன செய்க

### சர்வதேச பத்திரிகை அமைப்புகள் ஒன்றாக அரசுக்கு வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 18

தேர்தல்கள் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பாகப் பணிபுரியும் சூழ்நிலையை உருவாக்குமாறு சர்வதேச பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திர அமைப்புகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் செஞ். குழுவின் பணிகள் நேற்றிலிருந்து முடிவுக்கு வந்தன

கொழும்பு, ஜூலை 18

மோதல்கள் முடிவுக்கு வந்ததையடுத்து செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினரை இந்த நாட்டில் தமது பணிகளைக் குறைத்துக் கொள்ளுமாறு அரசு கேட்டுக் கொண்டதற்கு அமைவாக, கிழக்கு மாகாணத்தில் உள்ள செஞ்சிலுவைக் குழுப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் வசந்தம் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

### பதவியேற்பு நிகழ்வில் புதிய ஆளுநர் சந்திரசிறி



திருகோணமலை, ஜூலை18

'வடக்கின் வசந்தம்' செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

வடக்கு மாகாண ஆளுநராக நேற்றுப் பதிவியேற்றபோது மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சுப நேரத்தில் ஆளுநராக அவர் பதவியேற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் பிரதம செயலாளர்

(16ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

யாழ்ப்பாணம். CALL: 021-2225899

கொசி உணவகம் Feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சிவமயம்

## நாகர் கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயம் நாகர் கோயில்

**ஆலய புனருத்தாரணம், நித்திய பூசை தொடர்பான அவசர கலந்துரையாடல்**

இடம் : உபயகதிர்காமம் முருகன் ஆலயம்
காலம் : 25.07.2009 சனிக்கிழமை பி.ப. 2 மணி
தலைமை : மு.சிதம்பரப்பிள்ளை

(ஆலய பரம்பரைத் தலைவரும் , நம்பிக்கைப் பொறுப்பாளரும்) மேற்படி ஆலய செயற்பாடுகள் தொடர்பான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் நாகர் கோயில் மக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மு.சிதம்பரப்பிள்ளை
(தலைவர்).

## பாராட்டுகின்றோம்



கல்வியங்காடு செங்குந்தா பொதுச் சந்தையின் பிரதான நுழைவா யில்களில் ஒன்று கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுக் கிடந்ததை பற்குணராசா யோகேஸ்வரி அவர்களுக்கு சுட்டிக்காட்டியதை உடன் கௌரவ சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரிடம் விளக்கியதையடுத்து மக்கள் மற்றும் சந்தை வர்த்தகர்களுக்காக திறக்கப்பட்டதையிட்டு பாராட்டி அகமகிழ்கின்றோம்.

செங்குந்தா பொதுச் சந்தை
வர்த்தகர்கள்.

## லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

- "A" தர பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கை நெறிகளுக்கு அனுமதி.
- குறைந்த கட்டணச் சலுகைகள், U.K யில் சகல வசதிகளும்.
- தினமும் காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை நேரில் சந்திக்க ஏற்பாடு. சந்தித்தவர்கள் விவரங்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு : 021 222 3818
எந்நேரமும் தொடர்பு : 0774528818
E.Mail : mg1404_2009@yahoo.com
*148, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (யுனிசெவ் முன்பாக).*

## ஒளியுடன் கலந்த ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



*தோற்றம் 30.01.1942 மறைவு 18.07.2000*

**வேலுப்பிள்ளை கனகரட்ணம்**
(ADP - சண்டிலிப்பாய் - முன்னாள் உதவி திட்டமிடல் பணிப்பாளர்)

ஒன்பது ஆண்டுகள் ஓடி
மறைந்தாலும்
என்றும் எம் உள்ளத்துள்
வாழ்ந்து கொண்டிருக்கும்
எம் அன்புருவமே!
உங்கள் ஆத்ம சாந்திக்கு
இறைவனை இறைஞ்சும் - அன்பு
மேகா, திலீபன்,
கோகு, அர்ச்சா (கனடா).

## மரண அறிவித்தல்

### பாவிலுப்பிள்ளை பிலுப்பையா



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை பிலுப்பையா (16.07.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் விக்ரோறியாவின் அன்புக் கணவரும் அந்தோனிப்பிள்ளையின் சகோதரரும் (திருகோணமலை) அமரர் றீற்றா புஸ்பராணி மற்றும் சகாயராசா (கனடா), அன் ரனி லூட்ஸ்மேரி, அமரர் சிறிராசன், லெமிஎம்லூயிஸ் (கனடா), அன்ரோனியாடெய்சி, மேரிஜெசிந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யேசுதாசன், மேரிஜெசிந்தா சேவியர் வில்பிரட், மேரி ஜெனிற்றா, அமரர் மரியறூபநாயகம் மற்றும் பீற்றர் ரெட்ணம் ஆகியோரின் மாமனாரும் வரதராஜன் - அனிற்றாயூலியற் (ஜேர்மனி), அன்ரன்யூபேட் - டனுஷியா (அமெரிக்கா), கனிஸ் ராயூடிற், கல்வின், எர்வின், ஜெயறூபன், ஜெஸ்மின்கார்மேலா, ஜெனற் காமலிற்றா, ஜெனுஷன், டிலைக்ஷி, மெற்றில்டா, டிலைக் ஷனா, தருசனா, றொபின்ஷன், றெனிஸ்ரா, றெஜி, ரிவ்வனி, ரானியா ஆகியோரின் பாசமிகு பேரனும் டில்சான், டிலக்ஷியா, றம்மி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (18.07.2009) சனிக்கிழமை சில்லாலை புனித கதிரை அன்னை ஆலயத்தில் பி.ப. 2.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் அல்லைப் பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலய சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளளவும்.

*நல்லாயன் வீதி,*
*சில்லாலை.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஜூலை 18

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

காலை 8.15 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிரதித் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய தர்மபரிபாலன சபை அறிவித்துள்ளது.(1)

## அரியாலை கிழக்கு விவசாயிகளுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 18

அரியாலை கிழக்கு, நாவலடி வரையான நெற்காணிகளில் 2009, 2010 ஆம் ஆண்டு பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதி பெற்றவர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அரியாலை வீதி நுழைவாயிலில் தத்தம் விவசாய உபகரணங்களுடன் ஒன்று கூடுமாறு அரியாலை விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. (204)

## தீயணைப்புச் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மிகப் பழைமை வாய்ந்த தீயணைப்பு வாகனத்தின் திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதால் இத்திருத்த வேலைகள் முழுமை பெறும்வரை தீயணைப்பு வாகனம் சேவையில் ஈடுபடாது என்று மாநகரசபைச் செயலாளர் க. இராசதுரை அறி வித்துள்ளார். (1)

## காணி விற்பனைக்கு

சக்கோட்டை புனித சவரியார் ஆலயத் திற்கும் பாடசாலைக்கும் மிக அண்மையாக குடியிருப்புக்கேற்ற இரண்டு பரப்புக் காணி விற்ப னைக்குண்டு

தொடர்பு:0774528818

## தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் தனிநபர் தங்குவதற்கு சிறிய வீடு அல்லது அறை தேவை.

தொடர்பு: 0777571915

## கட்டடம் வாடகைக்கு விடப்படும்

இல.186,கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 2200 ச.அடி கொண்ட 3கடை கொண்ட 2 மாடிக் கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 021 2228634

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் *20.07.2009* ஆம் திகதி விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

★ **றாஜீன்**
பழம் வீதி, ஆனைக்கோட்டைச் சந்தி.
T.P.No- 021 222 2867

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி பவானி குமாரசாமி அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி கமலம் சபாரட்ணம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திய டையப் பிராத்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



எமது இசைத்துறையின்
விரிவுரையாளர்
திருமதி ஜனனி நடேசமூர்த்தி
அவர்களின் பாசமிகு மாமியார்

**திருமதி கமலம் சபாரத்தினம்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இசைத்துறை விரிவுரையாளர்கள்,
[illegible]

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சாரணர் இயக்கத்தின்
வழிகாட்டியாகவும் பழைய மாணவர் சங்கக் கணனிப்
பிரிவின் பொறுப்பாளராகவும்கடமையாற்றும்
கோ. செல்வவிநாயகம் அவர்களின் துணைவியார்

**அமரர் புவனேஸ்வரி செல்வவிநாயகம்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
வல்வெட்டித்துறை

## மரண அறிவித்தல்கள்

### செல்வி பெரியதம்பி கற்பகம் (ஆசை)

மீசாலை கிழக்கைச் சேர்ந்த செல்வி பெரியதம்பி கற்பகம் (ஆசை) நேற்று(17.07.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.07.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
செ.வைரவநாதன்.

### திருமதி விக்கினேஸ்வரன் புஸ்பவதி (இராசாத்தி)

கட்டுவன் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வரோதய நகர், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்கினேஸ்வரன் புஸ்பவதி 16.07.2009 வியாழக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற செந்தில்நாதன் - குணேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் செந்தில் நாதன் விக்கினேஸ்வரனின் அன்பு மனைவியும், அஞ்சலா, நிரஞ்சலா, வின்சலா, அமலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சித்திரராமன், எடிசன் ஆகியோரின் பாசமிகு மாமியும், விதுஷிகா, விதுஷன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விநாயகமூர்த்தி, பூமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குமாரசாமி, வான்மதி, சிவராசா, வளர்மதி, பேரின்பநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2009) சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அன்பு வழிபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

310, வரோதயநகர்,
புதுக்குடியிருப்பு, திருகோணமலை,
026 - 4911559

தகவல்:
கு.பூமணி (சகோதரி)
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

### திருமதி சபாரத்தினம் கமலம் (கமலம்மா)



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் [illegible]ணவாய் மூத்த விநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலம் சபாரத்தினம் நேற்று (17.07.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், கிருஷ்ணமூர்த்தி, முருகமூர்த்தி, பவானி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கணேசமூர்த்தி, நடேசமூர்த்தி, இந்துமதி, வளர்மதி ஆகியோரின் பாசமிகு தாயும், நந்தினி, ஞானரூபி, குமாரசாமி, சசிகலா (சித்த ஆயுள்வேத வைத்தியர்), ஜெனனி (இராமநாதன் நுண்கலைப் பீடம்), சவுந்தரராஜா, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், கணேஷானந்த் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஜெனனி, மயுரேசன், மாதங்கி, ஆர்த்தி, சிவகலை, கோகர்ணன், அஸ்வின், சிவமைந்தன், கிறீஷன், மிருனாளினி, ஆகாஷ், யோகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2009) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்த மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூத்த விநாயகர் கோயிலடி,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி,*

தகவல்: குடும்பத்தினர்.
T.P. 021 2264012

### திருமதி பரமசாமிஐயர் புவனேஸ்வரிஅம்மா

சரசாலையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமசாமிஐயர் புவனேஸ்வரி அம்மா நேற்று(17.07.2009)வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ செ.பரமசாமி ஐயரின் அன்பு மனைவியும், சிவஸ்ரீ நடராஜக்குருக்களின் (பிரதம குரு, லுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயம், சரசாலை) சகோதரியும், பிரம்மஸ்ரீ ப. சோமாஸ்கந்தசர்மா (சரசாலை), திரு மதி பா.கௌரிஅம்மா,திருமதி ச.பத்மாவதி(கிளி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி சோ.கிரிஜாதேவி,காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண சர்மா மற்றும் பிரம்மஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று(17.07.2009) வெள்ளிக்கிழமை மாலை திருகோணமலையில் நடை பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,சரசாலை,
சாவகச்சேரி.
தொ.பே.0602216805

தகவல்:
பிரம்மஸ்ரீ ப. சோமாஸ் கந்தசர்மா
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நாட்டுக்கு எதிரான நடவடிக்கை மக்களுக்கு எதிரானது என்ற வாதம்

''நாடொன்றின் மீது விதிக்கப்படும் தடை அந்த நாட்டு மக்களையே பாதிக்கின்றது. நாட்டு மக்களைத் தண்டிப்பதை சர்வதேச சமூகம் அனுமதிக்கக் கூடாது.'' - என்று எகிப்தின் சாம் எல் ஷெய்க் நகரில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் பதினைந்தாவது உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

அதாவது நாடு ஒன்று - அதன் தலைமை ஒன்று - இழைத்ததாகக் கூறப்படும் தவறுக்காக அந்த நாட்டையோ அல்லது அதன் மூலம் அந்த மக்களையோ தண்டிக்கக்கூடாது என்று சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துச்சொல்ல விழைந்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி.

இதே போன்ற கருத்தை சில நாள்களுக்கு முன்னர் அமெரிக்காவின் 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

''ஓர் அரசு தவறாக நடந்து கொண்டது என்பதற்காக அந்த நாட்டின் அனைத்து மக்களையும் தண்டிக்கப் போகின்றீர்களா? இல்லை, அதற்குப் பொறுப்பானவர்களையா? இப்போது என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நானே இந்த மனித உரிமைகளை மீறி மக்களைக் கொன்றேன் என்று வைத்துக்கொள்ளுங்கள், சரியா? நீங்கள் என்னை - மஹிந்த ராஜபக்ஷவை - தண்டிப்பீர்களா? அல்லது தடைகள், முட்டுக்கட்டைகள், தட்டுப்பாடுகள், பயணக் கட்டுப்பாடுகள் போன்றவற்றைப் போட்டு அப்பாவி மக்களை முடக்குவீர்களா? என்னைத் தண்டிப்பதாயின் கூட அதற்கு வழி உண்டே!'' - என்று ஜனாதிபதி அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேபோன்ற கருத்தை அரசுப் படைகளின் சிரேஷ்ட அதிகாரியாகப் புதிதாகப் பதவியேற்றிருக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவும் குறிப்பிட்டிருக்கின்றார். யுத்தக் குற்றங்களுக்கான விசாரணை எவையும் இலங்கைப் படைகள் எதிர் கொள்ள வேண்டி நேராது என்று அவர் அடித்துக் கூறியிருக்கிறாரர்.

இத்தகைய கருத்துக்கள், இலங்கைக்கு எதிரான சில சர்வதேச நடவடிக்கைகளுக்கான முனைப்புகள் காணப்படுவதையும் அது இலங்கை அரசுத் தலைமைக்கு அசௌகரியமான நிலையை உருவாக்கியிருக்கின்றமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன என்பது பிரத்தியட்சம்.

வன்னியில் இறுதிப் போர் தீவிரமடைந்த நிலையில் அரங்கேறிய கொடூரங்கள் தொடர்பாக எழுந்த அதிர்வலைகள் சர்வதேச சமூகத்தை இன்னும் ஆற்றுப்படுத்தவில்லை என்பதும் மறுக்க முடியாததாகும்.

அரசுப் படைகள் தொடுத்த தீவிர யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏதும் நேரவில்லை, உயிரிழப்பு ஏற்படாமலேயே 'மக்களை மீட்கும் அந்த மனிதாபிமான நடவடிக்கையை' இலங்கைப்படைகள் வெற்றிகரமாக மேற்கொண்டன என அரசுத் தலைமையும், படைத் தலைமையும் கூறிக் கொண்டாலும் கூட, இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் வெறுமனே சொல்வதைச் செவிமடுக்கும் ஜந்து அல்ல, அதற்கும் விடயங்களை நோக்கி, உய்த்தறிவதற்கான புலன்கள் நுணுக்கமாக உள்ளன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

வன்னி யுத்தம் உக்கிரம் பெற்றிருந்த சமயம் அந்த மண்ணில் இருந்தபடி, யுத்தப் பேரிழப்புகள் பற்றிய புள்ளி விவரங்களை வெளிப்படுத்திய டாக்டர்கள் இப்போது தடுப்புக்காவலில் உள்ளனர். அவர்களைப் பின்னர், ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை அழைத்துக் காட்சிப்படுத்திய அரசுத் தலைமை, யுத்த காலத்தில் அவர்கள் கூறிய கருத்துக்கள் மற்றும் தகவல்கள், புள்ளி விவரங்கள் போன்றவை விடுதலைப் புலிகளின் அழுத்தத்தின் பேரில் வெளியிடப்பட்ட தவறான விடயங்கள் என்றும், யுத்த காலத்தில் ஒரு சில நூறு பேர் மட்டுமே உயிரிழக்கவும் ஒரு சில நூறு பேர் மட்டுமே காயமடையவும் நேரிட்டது என்பதே உண்மை என்றும் அவர்களைக் கொண்டே கூற வைத்தது.

ஆனால் இந்த யுத்த காலத்தில் படுகாயமடைந்த நிலையில் வன்னியில் பெரு நிலப்பரப்பில் இருந்து கப்பல் மூலமும் வேறு வழிகளிலும் வெளியே கொண்டு வரப்பட்ட சிவிலியன்களின் எண்ணிக்கையே பல்லாயிரக் கணக்கில் உள்ளது என்பதைக் குறிப்பிட்டு, தற்போது அரசுப் படைகளின் காவலில் உள்ள சமயம் இந்த டாக்டர்கள் குறிப்பிடும் புள்ளி விவரங்கள் எங்கோ இடிக்கின்றன என்ற நிலையை சில சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் அம்பலப்படுத்தி சுட்டிக்காட்டுகின்றன.

இந்தப் பின்புலத்திலேயே நாட்டு மக்களைப் பாதிப்புக்குள் ஆழ்த்தும் வகையில் தண்டிப்பு நடவடிக்கைகளுக்கு சாவதேச நாடு எத்தனிக்கக்கூடாது என்ற உபதேசம் இலங்கை அரசுத்தலைமையால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தேசக் கடன் வசதி முடக்கம், ஐரோப்பிய நாடுகளுக்கு ஆடை வகைகள் உட்பட சில ஏற்றுமதிப் பொருள்களுக்காக இலங்கைக்கு விசேட வரி விலக்கு வழங்கும் ஜி.எஸ்.பி. சலுகையை ஐரோப்பிய நாடுகள் விலக்கிக்கொள்ளும் யோசனை, சில பயணத்தடைகள் விதிக்கப்படும் திட்டம் என்பன போன்ற பல்வேறு ஊகங்களுக்கு மத்தியிலேயே இந்தக் கருத்துக்கள் பிரதிபலிக்கப்படுகின்றன என்பதும் கவனிக் கத்தக்கது.

அதுவும், மேற்படி சர்ச்சையை உருவாக்கியுள்ள வன்னித் தீவிர யுத்தம் குறித்தும், அப்போது கட்டவிழ்ந்த பயங்கரங்களின் உண்மை நிலை குறித்தும் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற மேற்குலகின் குரல், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளின் வலிமை மூலம் குரல்வளை நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட பின்னணியிலேயே இத்தகைய தண்டிப்பு நடவடிக்கைகள் குறித்து பிரஸ்தாபிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கது.

சர்வதேசம் விசாரிக்க முற்படுவது நாட்டின் இறைமையில் தலையிடும் செயல் என்றும் -

உதவித்திட்டங்கள், வசதிகள், சலுகைகள் போன்றவற்றை முடக்குவது. நாட்டின் அப்பாவி மக்களுக்கு எதிரான நடவடிக்கை என்றும்-

விமர்சனப்படுத்தப்படுவதால் இவ்விடயத்துக்கு எப்படித்தான் தீர்வு காண்பதோ....? மேற்குலகுக்குத்தான் வெளிச்சம்.....!

# வடக்கில் முடங்கியிருக்கும் தொழிற்சாலைகளை மீள இயங்க வைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை

### கைத்தொழில் அமைச்சர் யாழ்ப்பாணத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை18

வடக்கில் நீண்டகாலமாக இயங்காமல் முடங்கியிருக்கும் தொழிற் சாலைகளை மீள இயங்க வைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ்வினால் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

கைத்தொழில் அமைச்சர் குமார வெலகம இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்திருந்த கைத்தொழில் அமைச்சர் குமார வெலகம மற்றும் தேசிய வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள வணிகர்கழகத்தில் முற்பகல் 10.30மணியளவில் குடாநாட்டு வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் குமாரவெலகம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பயங்கரவாதம் முற்றாகத் தோற கடிக்கப்பட்டு இப்பொழுது நாடு அபி விருத்தியை நோக்கி பயணித்துக் கொண்டி ருக்கின்றது 'வடக்கின் வசந்தம்' என்ற திட்டத்தில் வடக்கில் அபிவிருதிப் பணிகள் முழுமூச்சோடு நடைபெற்று வருகின்றன.

இந்தக் காலகட்டத்தில் வட பகுதியில் நீண்டகாலமாகத் தொழிற்படாமல் யுத்தம் காரணமாக முடங்கிக் கிடக் கின்ற தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கமுடியும்.

வடபகுதியில் முன்னர் காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை, ஒட்டு சுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, அச்சுவேலி தொழிற்பேட்டை எனப் பல்வேறு தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருந்தபோது இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளும் அதிகரித்துக் காணப்பட்டதுடன் பல கோடி ரூபா இலாபமும் அரசுக்குக் கிடைத்தது.

இத்தகைய பலவித நன்மைகளைத் தருகின்ற தொழிற்சாலைகளை மீளவும் இயக்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டங்களை வகுத்துள்ளார். வெகு விரைவில் அவற்றை இயக்குவதற்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றார் என்றார்.

இந்தக்கலந்துரையாடலில் தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த தொழில் அதிபர்கள், குடாநாட்டு வர்த்தகப் பிரமுகர்கள் எனப் பல்வேறு துறை சார் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (50-9)




*கைத்தொழிற்துறை அமைச்சர் குமாரவெலகம உள்ளிட்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்திருந்தபோது யாழ்.வணிகர் கழகத்தில் குடாநாட்டு வர்த்தக தொழில் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள். சந்திப்பில் அமைச்சர் குமாரவெலகம உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட குடாநாட்டு மற்றும் தென்னிலங்கை வர்த்தகத் தொழில் பிரமுகர்களின் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.* *(படங்கள்: ஒங்காரன்)*

# நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் நடமாடும் சேவை இன்று யாழ்.மத்திய கல்லூரியில்

### நேற்றைய சேவையில் 1,500 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டிலான நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறுகின்றது.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நடமாடும் சேவையில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத கம்லத், ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஏ.ஜி. தர்மதாஸ, பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகர ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

குடாநாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த பொதுமக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பிறப்பு, இறப்பு,விவாகச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் முதியோருக்கான அடையாள அட்டைகள் வழங்கப்படுவதுடன் சட்ட உதவிகள், லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விடயங்கள், வீடமைப்பு, மத்தியஸ்தர் சபைகள், நட்டஈடுகள் போன்றவை தொடர்பாகவும் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வாரத்தில் அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனவும் அடையாள அட்டைக்கான படத்தை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குஉட்பட்டவர்கள் மட்டுமே இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டை தொடர்பான சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் யாழ். பிரதேச செயலர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்று திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவின் நடமாடும் சேவையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களைப் பெறுவதிலும் அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பிப்பதிலும் அதிக கவனம் செலுத்தினார்கள்.

பிரதேசப் பிரிவின் அனைத்துக் கிராம அலுவலர்களும் சமுகமளித்து பொது மக்கள் தமக்குத் தேவையான ஆவணங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளில் உதவினார்கள். முதியோர்களுக்கான அடையாள அட்டைகள் உடனடியாகவே அவர்களுக்கு வழங்கப்பட்டது. பொதுமக்கள் தொலைந்து போன ஆவணங்கள் குறித்த பொலிஸ் பதிவுப் பத்திரங்களை பெறக்கூடியதாக பொலிஸாரும் சேவையில் இணைந்து கொண்டனர். நேற்றைய நடமாடும் சேவையில் சுமார் 1500 இற்கும் அதிகமான மக்கள் தமது பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விண்ணப்பங்களை வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர் சுகத் கே கம்லத், அரசியல் அமைப்பு விவகார அமைச்சின் செயலாளர் திருமதி மல்காந்தி விக்ரமசிங்க, மேலதிக செயலாளர் கமலினி டீ சில்வா ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ.ஜி.தர்மதாச, பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகரா, உதவிப் பதிவாளர் நாயகம் என். சதாசிவ ஐயர், நீதி அமைச்சின் ஆலோசகர் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு, ஜனகரணதுங்கா, யாழ்.மாவட்ட மேலதிக பதிவாளர் எஸ்.பிரபாகரன், யாழ்.மாவட்ட பதிவாளர் திருமதி இராசரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நாளை

| | |
|---|---|
| ஆடி 03 | 19.07.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.ப. 04.22 வரை |
| நட்சத்திரம்: | ரோகினி |
| | மு.ப. 10.44 வரை |

# தலிபான்களுடன் தொடர்புடையோரே இலங்கை கிரிக்கெட் அணிமீது தாக்கினர்

### மகிந்தவிடம் பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு

ஷாம்எஸ் ஷேக், ஜூலை18

லாகூரில் இலங்கைக் கிரிக்கெட் அணியினர் மீதான தாக்குதலைத் தலிபான்களுடன் தொடர்புடையோரே மேற்கொண்டனர்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த விடம் தெரிவித்தார் பாகிஸ்தான் பிரதமர் யூசுப்ரசாகிலானி.

எகிப்தில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள இரு நாட்டுத் தலைவர்களும் கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.

இது தொடர்பாகப் பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்தவை வருமாறு.

சில மாதங்களுக்கு முன்னர் லாகூரில் இலங்கைக் கிரிக்கெட் அணி மீது தாக்குதலை மேற்கொண்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

இது தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசுடன் இது குறித்த தகவல்களை அவ்வப் போது பகிர்ந்து வருகிறோம்.

தலிபானுடன் தொடர்புடையவர்களே இதனைச் செய்துள்ளனர். இது தொடர்பில் சிலரைக் கைது செய்துள்ளோம். ஏனையவர்களையும் கைது செய்ய முயல்கிறோம்.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து கலக்கமடையாமல் கிரிக்கெட்டில் எமது தொடர்புகளைப் பேணவேண்டும்.

இலங்கையில் நடபெறும் வெளி விவகார செயலாளர் மட்ட ஆலோசனைகளில் கலந்துகொள்வது குறித்தும் இஸ்லாமாபாத்தில் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் கூட்டத்தை நடத்துவது பற்றியும்மகிழ்ச்சியடைந்துள்ளோம் - என்றார் அவர்.

(அ- சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயம்
## தேர் வெள்ளோட்ட மற்றும் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

**தேர் வெள்ளோட்டம்**
நாளை (19.07.2009) முற்பகல் 10 மணிக்கு

**தேர்த்திருவிழா**
20.07.2009 முற்பகல் 10 மணிக்கு குறித்த நேரத்தில் விழா இடம்பெற ஐயனார் திருவருள் கூடியுள்ளது.
கலாபூஷணம் உலோக வேலை விற்பன்னர் திரு. கெங்காதரன் ஆச்சாரியார் அவர்கள் காரை மைந்தன் களூ மாத்தையா ஞாபகார்த்த தங்க விருது வழங்கி கௌரவிக்கப்படுவார்.

**ஆலய அறங்காவலர்.**
*வியாவில், காரைநகர்.*

### கணித பாட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வுகள் இன்றும் நாளையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(1-207)

## அடகுப்பொருள்கள் விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.05.2008இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்பட்டாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 25.07.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

**ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.**

**ஹற்றன் நஷனல் வங்கி**

ஈழத்தின் முன்னணி அரங்க நிறுவனமான
செயல் திறன் அரங்க இயக்கம் நடத்தும் இலவசப் பயிற்சிநெறி

## சிறுவர் அரங்கிற்கான நாடகத் தயாரிப்பு பயிற்சிநெறி

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சிறுவர் நாடகங்கள் தயாரிப்பதில் மற்றும் நடிப்பதில் பயிற்சி வழங்கப்படுவதோடு சிறுவர் நாடக மேடையேற்றங்களிலும் வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 30.08.2009**

சுயமாகத் தயாரித்த சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

தொடர்பு முகவரி:
செயல் திறன் அரங்க இயக்கம்,
(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்பாக)
அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P.: 0602216222

## பிரதேச செயலகம், தென்மராட்சி
## கேள்வி அறிவித்தல்

1. கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு நிதி ஒதுக் கீட்டின் கீழ் பின்வரும் வேலைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

| வேலை விவரம் | மீளளிக்கத்தக்க கேள்விப்பணம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| அல்லாரை தும்பு உற்பத்தி தொழிலுக்கான பொது சேவை நிலையம் திருத்தமும் புனருத்தாரணமும் | 3500.00 | 100.00 |

2. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.
   I) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின் ICTAD M-09 தரத்தில் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
   II) கேள்விப் படிவங்களைப் பெறும்போது புதுப்பிக்கப்பட்ட (2009) ICTAD M-09 புத்தகம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. கேள்விகளுக்கு முன் அனுபவமும் நிதிவளமும் உள்ள ஆர்வமுள்ள பதிவு செய்யப்பட்ட சமூகமட்ட நிறுவனங்களும் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விப்படிவங்களை 21.07.2009 இலிருந்து 27.07.2009 மு.ப. 10 மணிவரை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விப் படிவங்களை மீளளிக்கக் கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணத்தைப் பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்விப் படிவங்கள் 29.07.2009 நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும்.
7. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு உறைகளின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப் படிவங்கள் மூலப்பிரதி/இணைப்பிரதி எனக் குறிப்பிடப்பட்டு பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி என்ற முகவரியிட்டு உரிய திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

செ.ஸ்ரீநிவாசன்,
தலைவர்,
பிரதேச [illegible],
பிரதேச செயலகம், தென்மராட்சி.

*பிரதேச செயலகம்,*
*தென்மராட்சி,*
*சாவகச்சேரி.*

### போசாக்கு கண்காட்சி

கட்டைவேலி, ஜூலை 18

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் ஒழுங்கமைக்கப்பட்ட போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமையும், நாளை மறுதினம் திங்கட்கிழமையும் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சிக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(1-275)

## மரண அறிவித்தல்



*தர்மரட்ணம் பாலசுப்பிரமணியம்*

அராலி வடக்கை பிறப்பிடமாகவும், காழுவன், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான தர்மரட்ணம் பாலசுப்பிரமணியம் நேற்று (17.07.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மரட்ணம் - தையல்நாயகி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற கந்தையா - பத்மாவதி தம்பதியினரின் மருமகனும் கனகாம்பிகையின் ஆருயிர்க் கணவரும், கருணாகரன், பிரபாகரன் ஞானேஸ்வரூபி ஆகியோரின் அருமைத் தந்தையும் மிசேல், யசோதா, கோபிகரன் ஆகியோரின் மாமனாரும் கரிஷ்ஷின் பாட்டனாரும், சபாநாதன், ஜெயலக்சுமி, ஆனந்த லக்ஷமி, ராஜரட்ணம், ராஜராஜேஷ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.07.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 20.07.2009 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இறுதிக்கிரியைகளின் பின் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

174/6/12 MESSENGER STREET,
COLOMBO -12
0112 391449

தகவல் :
திருமதி கனகாம்பிகை பாலசுப்பிரமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யாகிப் போன பொய்க்கால் குதிரையாட்டம்

உமா மகேஸ்வரி, உடுவில் தெற்கு, மானிப்பாய்.

''அந்தா பாரு குதிரையாடுது
இந்தா பாரு குதிரையாடுது
கலைவிழா மேடையிலே
நாலு பேரு மத்தியிலே
தஞ்சாவூரு குதிரையாடுது
சிங்காரக் குதிரையாடுது''

(நன்றி: பொதிகை)

சமூகம் என்பது பொருளாதார நிலையிலே உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கின்ற கட்டமைப்பினைக் கொண்டிருக்கின்றது. இந்த வேற்றுமைப் பாட்டிலே சாதாரண மக்கள் மத்தியிலே காணப்பட்ட நடனங்களை கிராமிய நடனங்கள், பாமர நடனங்கள், நாட்டார் நடனங்கள் என்று கூறுவது வழக்கம். ஈழத்தில் கிராமிய நடனங்கள் பற்றி ஆராயும் போது சமூக மானிடவியல் அணுகுமுறைகளையும், தற்போது எஞ்சியிருக்கும் கூத்து வடிவங்களையும், நாட்டார் வழக்கியற் கையளிப்பினையும், அடிப்படையாகக் கொண்டு ஆராய வேண்டியுள்ளது. கிராமிய நடனம் அல்லது கூத்துக்கலை செந்நெறிக்கலையாக மதிக்கப்படுவதில்லை. ஆனால் கிராமிய நடனமே செந்நெறிக்கலைக்கான ஊற்றாகும் என்பதை மறுக்க முடியாது. ஈழத்திலே காணப்பட்ட பல்வேறு வடிவங்களினாலான கிராமிய நடனங்களிலே விழாக்களோடு இணைந்த நடனங்கள் சிறப்பானவை. அப்பிரிவினுள் சிறப்புற்று விளங்குவது இப்பொய்க்காற் குதிரையாட்டம். மனிதன் தனது அறிவும், உணர்வும் இழுத்துச் செல்லும் முறைகளிலெல்லாம் இறைவனை நினைத்து வழிபட முயன்றதன் பயனாக இவ்வாறான ஆடல்கள் தோற்றம் பெற்றன.

சமயக்கட்டுப்பாடுகள், கொள்கைகள், கலைமரபுகள் என்பவற்றை இணைக்கும் செயற்பாடுகள் இணுவில் கிராமத்திலே சிறப்பாக இடம்



பெற்று வந்தன. இவ்விடத்தைச் சேர்ந்த கந்தவனம், சிற்றம்பலம் ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்துக் கிராமிய நடனக் காப்பாளராக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே விளங்கியதாகப் பேராசியர் சபா.ஜெயராசா கூறுகிறார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே தனவந்தர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும், குதிரை வண்டிகளைத் தமது போக்குவரத்திற்காகப் பயன்படுத்தினர். உயர்ந்த அந்தஸ்தின் குறியீடாக குதிரைகள் அப்போது விளங்கின. இதனைச் சார்ந்து வளர்ந்த குதிரையாட்டம் விழாக்களில் நிகழ்த்தப்பட்டு உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்றது என்பது உண்மை. குதிரையாட்டம் என்பது பொய்க்காற் குதிரையாட்டம், பரியாட்டம், புரவியாட்டம் என்றெல்லாம் அழைக்கப்பட்டது. ஆரம்ப காலங்களிலே இணுவில், அளவெட்டி, சித்தங்கேணி, ஆனைக்கோட்டை முதலிய இடங்களில் இவ்வாட்டமும், ஆட்டக் கலைஞர்களும் சிறப்புற்று விளங்கினர். இவ்வாட்டத்தில் ஆடும் குதிரைகளைப் பலவாறாகக் கூறுவர். தென் பொதிகைக் குதிரை, சீமைக்குதிரை, சிங்காரக்குதிரை, வடமுனைக் குதிரை, வங்காளக் குதிரை, தாண்டகக் குதிரை, வாதவூர்க் குதிரை போன்ற பல பெயர்களில் இக்குதிரைகள் அழைக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் உரிய சிறப்பான ஒப்பனைவேறுபாடுகளும் காணப்படுகின்றன. இப்பொய்க்காற் குதிரையாட்டத்திலே தனிக்குதிரையாட்டம், ஆண், பெண் குதிரைகளின் ஆட்டம், இரு ஆண், இரு பெண் குதிரைகளின் ஆட்டம் எனப் பல வகை குதிரைகளின் ஆட்டம் இடம்பெறும். இவ்வாட்டத்திற்குப் பயன்படும் குதிரைகள் மென்மையான மரங்களைக் குடைந்து தயாரிக்கப்படுவன. அழகிய மரவேலைப்பாடுகளைக் கொண்டவையாக விளங்குகின்றன. ஆடுபவர் குதிரையின் நடுப்பகுதியில் நுழைந்து தோளிலே 'வார்' போட்டு குதிரையைத் தொங்கக் கூடியவாறு செய்து பிடித்திருப்பார்.

(தொடரும்...)

# பலாத்கார மத மாற்றத்தைக் கண்டு மனம் வருந்திய பாவலர் துரையப்பாபிள்ளை



தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகுமே.

- அதிவீரராம பாண்டியன்
நறுந்தொகை



மேற்படி வரிகளை வாசிக்கும்போது பாவலர் துரையப்பாபிள்ளையவர்களின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சிறு சம்பவம் இன்று பல்லாயிரக்கணக்கான இந்து மாணவர்களின் எதிர்காலத்தை செப்பனிட்டு அவர்களை மருத்துவர்களாக, எந்திரியர்களாக, பேராசிரியர்களாக, தலைசிறந்த ஆசான்களாக சீர்பெரு நிர்வாக உத்தியோகத்தர்களாக ஆக்கிய, ஆக்கிக்கொண்டிருக்கின்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பரந்த வியாபகமே எம்முன் நிற்கிறது.

1910ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஒருநாள் தெல்லிப்பழை அமெரிக்க மிசன் பாடசாலையின் அன்றைய அதிபர் சாமுவேல் கற்சிங் தெயிலர் துரையப்பாபிள்ளை அவர்கள் ஆழ்ந்த சிந்தனைவசப்பட்டார். அச்சிந்தனையின் தெளிவு பலாத்காரமாக இந்துமதச் சிறுவர்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றும் அதுவும் ஆங்கிலக் கல்வி தேடி வரும் அறியாப் பருவத்தினரை வஞ்சகமாக மதமாற்றம் செய்யும் மிசனரிமாரின் செய்கையை எதிர்ப்பதாக இருந்தது.

பாவலர் அவர்கள் மிசனரிமாருடன் கருத்து வேறுபாடு கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறினார். அவருடன் மயிலிட்டி இலங்கைநாயகம், கொல்லங்கலட்டி சங்கரப்பிள்ளை ஆகிய ஆசிரியர்கள் இருவரும் 75 சதவீதமான மாணவர்களும் அமெரிக்க மிசன் பாடசாலையை விட்டு வெளியேறினர்.

இந்து மாணவர்களுக்கு இந்துசமயச் சூழலிலேயே ஆங்கிலமொழி மூலக்கற்கை நெறியைப் போதிக்கவேண்டும் என்பதற்காகப் பாவலர் அவர்கள் ஒரு இந்துவாக மாறி தெயிலர் அ.துரையப்பாபிள்ளை என்ற தமது பெயரை தெல்லிப்பழை அ.துரையப்பாபிள்ளை என மாற்றி தான் ஆரம்பித்த ஆங்கில பாடசாலைக்கு அதிபரானார். ஆரம்பத்தில் அவரது விசாலமான வீட்டிலேயே பாடசாலை நடந்தது. இதுபற்றி அப்பொழுது மாணவராக இருந்த மண்வள ஆய்வாளரான காலஞ்சென்ற கந்தையா இவ்வாறு கூறுகிறார்.

''பாடசாலை குருகுலமுறையில் தலைமை ஆசிரியரின் வீட்டில் நடைபெற்றது. ஏறத்தாழ நாள் முழுவதுமே பாடம் நடக்கும். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கனிஷ்ட தராதரப் பரீட்சை எடுக்கும் எங்களுக்கு இரவிலும் பாடம் நடக்கும். கணித பாடத்தை திரு.சங்கரப்பிள்ளையவர்கள் எடுப்பார். காலையுணவினை மிக வேகமாக அருந்திவிட்டு பாடசாலைக்குச் செல்வோம். மதியம் உணவு நாட்டரிசியில் செய்யப்பட்ட பிட்டு. அத்துடன் ஒரு கோப்பை நீர் மட்டுமே. இதற்கான செலவு 3 சதம் மட்டுமே. பசியைத் தணித்துக் கொள்வதற்காக அவர் வளவிலுள்ள கொய்யா, மாங்காய் போன்றவற்றை தாராளமாகப் புசித்துக்கொள்வோம்.

க.செங்கதிரோன், (மகாஜனக் கல்லூரி பழைய மாணவன்)

சங்கரப்பிள்ளையவர்களின் கணிதபாடம் மாலை 5 மணி வரையும் நடக்கும். பின்னர் வீட்டுக்கு ஓடோடிச் சென்று தலைமையாசிரியர் வீட்டுக்கு இரவுச் சாப்பாட்டையும் பொதி செய்து எடுத்து வருவோம். வகுப்பு இரவு 10 மணி வரையும் நடக்கும். அதிபர் அவர்கள் பிரம்பைத் தாராளமாகப் பயன்படுத்துவார். இதைப் பொறுக்கமுடியாத அதிபரின் மனைவி பிரம்பை எடுத்து ஒளித்துவிடுவார். அதனால் வீட்டில் பூகம்பமே நிகழும்''.

[தொடரும்...]

# ஈழத்தில் பண்ணிசையின் இன்றைய நிலை

பகுதி - 3



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவி (சங்கீதம்)

நமது கலையையும் பண்பாட்டையும் நாம் கொலை செய்ததால் நமக்கு உரிய சிவ அபராதத் தண்டனைகளை நாம் இன்று அனுபவித்துக்கொண்டு இருப்பதைக் கண்களால் காணக் கூடியதாகவுள்ளது.

இலங்கையில் புண்ணிய நாச்சியார் திருமுறை தர்மம் தொடங்கி நாவலர் மற்றும் இராமநாதவள்ளல் தருமம், மழவராயர் மற்றும், பூதவராய தருமம் மற்றும், சிதம்பர கோயில் தருமம், சிவன் கோயில் தருமம் என வகை தொகையில்லாத தருமமும் தரும சாதனங்களும் அவற்றின் சாசனங்களும் தமிழரின் அரும் பெரும் கலையாகிய பண்ணிசையைக் கடுகளவு கூட வளர்க்க முயற்சி எடுக்காமல் இன்று இந்த நிறுவனங்கள் எல்லாம் சிவ அபராதத்தால் உருவம் அழிந்து விட்டன. அதனால் ஈழத்தில் எவ்வாறு பண்ணிசை மேல் ஓங்கி உயரமுடியும்?

கொழும்பு விவேகானந்த சபை, திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை, தக்கணகானசபை, அகிலஇலங்கை இந்து மாமன்றம், இந்து கலாசார திணைக்களம், நாவலர் சபை இவை எல்லாம் பண்ணிசை வளர்ச்சிக்குரிய நிதிவள நிறுவனங்களாக இருந்தும், அந் நிறுவனங்களில் ஆளுநர்களாக இருப்பவர்களே சிவத்துரோகிகளாக மாறிவிட்டனர்.

''சொல் ஒன்றும் செயல் ஒன்றும்'' ஆன இப்பெரும் தலைவர்களால் பண்ணிசையை வளர்க்கும் வளமான நிறுவனங்கள் வலுவிழந்து அகதிகளுக்கும், அநாதைகளுக்கும், விதவைகளுக்கும், வாழ்வளிக்கும் நிறுவனமாக தள்ளப்பட்டிருப்பது [illegible] இதற்கான அடிப்படைக் காரணங் [illegible] திருமுறைகளை நிந்தித்தமையைக் கூறலாம். ''தக்க யாகமே தக்க சான்றாகும்''.

எனவே ஈழத்தின் பண்ணிசை மக்களின் கலை கலாசாரத்தோடு ஒன்றுபட்டு இணைந்து இருக்கும் என்பதை ஏற்க மறுக்கும் ''நமது சமுதாயம் திருந்துமா?'' மக்களுக்கு நல் வாழ்வு கிடைக்குமா''? கடவுள் தான் கருணை செய்வாரா?

''ஞாலம் ஏழுமாம்
ஆலயவாயிலார்
சீலமே சொலர்
காலன் வீடவே''

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மத்தியஸ்தர்களுக்கான சட்டத்தை அறிந்து கொள்ளும் நிகழ்ச்சித்திட்டக் கருத்தரங்கு நேற்று முன்தினம் இடம்பெற்றது. நீதி சட்ட மறுசிரமைப்பு அமைச்சின் மாவட்ட மத்தியஸ்த உத்தியோகத்தர் ப.சதானந்தன், அரசமைப்பு விவகாரங்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பான அமைச்சின் செயலாளர் திருமதி மல்காந்தி விக்கிரமசிங்க, நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி கமலினி சில்வா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நீதி அமைச்சின் ஆலோசகர் சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு விரிவுரை நிகழ்த்துவதையும் கருத்தரங்கில் கலந்துகொண்ட மஸ்தியஸ்தர் குழு உறுப்பினர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன் )*

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு 03 ✱ 04 ✱ 1950



உதிர்வு 02 ✱ 06 ✱ 2009

### சண்முகராசா மனோரஞ்சிதம்

வெள்ளையுள்ளம் படைத்து உள்ளத்தால் உயர்வடைந்த எமது அன்புச் சகோதரியே! உமது ஆத்மா வண்ணை வைத்தீஸ்வரன் பாதாரவிந்தங்களைச் சென்றடைந்து பேரானந்தமடைய பிரார்த்திக்கின்றோம்.

இன்று(18.07.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல.185, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தங்களைப்பிரிந்து துயருறும்: (87097) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### யோவனம் அமிர்தானந்தர்

இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாவும் கொண்ட இளைப்பாறிய புகையிரத அதிபர் யோவனம் அமிர்தானந்தர் 12.07.2009 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோவனம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாசிலாமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இளைப் பாறிய புகையிரத அதிபர் முத்துதம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரத்ன மலர்ச்சாலையில் நாளை (19.07.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப் பட்டு கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அமிர்தானந்தர் குடும்பத்தினர்.
T.P. 2554396

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை18

மானிப்பாய், கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் செல்வி இ.சுப்பையாபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில்,லயன்306பியின் பிராந்தியத் தலைவர் லயன் சிறீவிமலேஸ்வரன் முதன்மை விருந்தினராகவும், தொழில்நுட்ப உத்தியோகத்தர் கி.சி. வரதராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

### பரிசளிப்பு விழா

ஊர்காவற்றுறை, ஜூலை18

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் வணபிதா ஜேம்ஸ் சிங்கராயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204-325)

## நீங்காத நினைவலைகள்

### இரண்டாம் ஆண்டு



தோற்றம் 17.07.1946

மறைவு 09.08.2007

திதி:18.07.2009

### அமரர் சபாபதி பொன்னுச்சாமி (அண்ணாத்துரை)

ஆண்டுகள் இரண்டாகியும் உனது அன்புச் சிரிப்பு
எம்மை விட்டு அகலாது ஐயா!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உன் நாமம் எம்மைவிட்டு அகலாது ஐயா!
பாசமென்னும் பாலத்தில் பயணித்த போதும்
உன் பாதங்களை என்றும் மறவோம் ஐயா!

"தாய் வீடு", கருணாநிதி ச.ச.நிலையம், வல்வெட்டி.

### நினைவு கூருகின்றோம்

11 ஆம் ஆண்டு 7 ஆம் ஆண்டு



அமரர் மாணிக்கம் சபாபதி — திருமதி சபாபதி சின்னக்கிளி

15.10.1924 தோற்றம் 10.11.1931
18.03.1998 மறைவு 03.04.2002
16.04.2009 திதி 18.04.2009

குடும்பத்தினர்.

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டம்
## யாழ்ப்பாண மாவட்டம் மீள் கேள்வி கோரல்கள்

யாழ்.மாவட்டத்தில் உள்ள மதகுகள், வீதிகளை வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல்கள்.

பெருந்தெருக்கள் அமைச்சின் நிதி வழங்கல்கள் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்.

1. பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) யாழ்ப்பாணம் வடக்கின் வசந்தம் 180 நாள் திட்டத்தின் கீழ் பின்வரும் மதகுகளின். புனர் நிர்மாண வேலைக்கான மூடிய கேள்விப் பத்திரங்களை பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், கேள்விச் சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார். கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 28.07.2009 அன்று முற்பகல் 10 மணியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாண காரியாலயத்தில் கிடைக்கும் கேள்விப்பத்திரப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 20.07.2009 தொடக்கம் 27.07.2009 வரை மீளளிக்க முடியாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 750.00 (பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

| | | ICTAD தராதரம் | பாதுகாப்பு கட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | வல்லை-உடுப்பிட்டி-வல்வெட்டித்துறை வீதியில் 4 ஆவது கி.மீ 1 ஆம் காற்பகுதியில் வடிகாலமைப்பு புனர்நிர்மாணம் செய்தல். | M10/C9 | 5,000.00 |
| 2 | சாவகச்சேரி -புலோலி வீதியில் 16/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 15,000.00 |
| 3 | புலோலி- கொடிகாமம்-கச்சாய் வீதியில் 19/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 19,000.00 |
| 4 | கண்டி-யாழ் வீதியில் 298/1 இலக்க மதகின் தளத்தினைமீள் நிர்மாணம் செய்தல் (Redecking) | M8/C9 | 18,500.00 |
| 5 | யாழ்-பருத்தித்துறை வீதியில் 28 ஆம் கி.மீ கடைசி காற்பகுதியில் வடிகால்வாய் நிர்மாணம் செய்தல் | M10/C9 | 5,000.00 |
| 6 | யாழ்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதியில் 10/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 12,000.00 |
| 7 | யாழ்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதியில் 11/1 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 15,000.00 |
| 8 | வல்லை-தெல்லிப்பழை-அராலி வீதியில் 23/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M9/C9 | 8,000.00 |
| 9 | கொக்குவில்-வட்டுக்கோட்டை வீதியில் 3/1 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M9/C9 | 6,500.00 |
| 10 | யாழ்-மானிப்பாய்-காரைநகர் வீதியில் 24/3 ஆம் இலக்க மதகில் பாதுகாப்பு சுவர் கட்டுதல் (Jacket wall) | M9/C9 | 10,000.00 |
| 11 | யாழ்-பலாலி வீதியில் 1/3 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 15,000.00 |
| 12 | யாழ்-பருத்தித்துறை வீதியில் 3/1 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M9/C9 | 7,500.00 |
| 13 | யாழ்-பருத்தித்துறை வீதியில் 3 ஆம் கி.மீ இல் வடிகால் அமைத்தல் | M10/C9 | 5,000.00 |

2. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

3. தகுதி வாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி-பால நிர்மாணத்துறையில் அந்தந்த தரங்களில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர், கடற்கரை வீதி, யாழ்ப்பாண காரியாலயத்தில் பார்வையிடலாம்.

5. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 30 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாகும்.

6. கேள்விப் பாதுகாப்பு கட்டணத் தொகையான மேற்குறிப்பிட்டுள்ள பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். செல்லுபடியாகக் கூடிய பாதுகாப்பு பணப்பத்தரங்களை கொண்டிராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

7.மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இரு பிரதிகள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல.761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்தி3ற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8.கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல.761, கடற்கரை வீதி யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்விப் பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

9. மேலதிக விவரங்களிற்கு தயவு செய்து பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், தொலைபேசி இலக்கம் 021 222 2968, தொலைநகல் இலக்கம் 021 222 2968, மின்னஞ்சல் முகவரி cejaffn@rda.gov.lk என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

[illegible]
[illegible],
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

எந்திரி.ரோசஸ் மரியதாசன்
மாகாணப் பணிப்பாளர்/வ.கி (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக சாலை

## த ஹிண்டு ஸ்போர்ட்ஸ்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விளையாட்டுச் செய்தி ஏடான "த ஹிண்டு ஸ்போர்ட்ஸ்" சஞ்சிகையின் ஆனி-ஆடி இதழ் வெளிவந்துள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியில் இருந்து தேசிய ரீதியில் பங்கு பற்றி தங்கப் பதக்கம் வென்ற மாணவன் செல்வன் சு.வாகீசனின் கௌரவிப்பு நிகழ்ச்சி பற்றிய முக்கிய செய்தியுடன் இரு வர்ணங்களில் இம்முறை இந்த இதழ் வெளிவந்திருக்கிறது.

பாடசாலை மாணவர்களின் விளையாட்டு வெற்றிகள் மற்றும் செய்திகளோடு, பொது அறிவை மேம்படுத்தும் வகையிலான 'உலக வலம்' பகுதியில் உலக விளையாட்டுச் செய்திகள், மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக "மாணவர் மூலை" மற்றும் சாதனை வீரர்களாகத் திழ்ந்த பழைய மாணவர் பற்றிய செய்திகளும் இந்த இதழில் இணைக்கப்பட்டுள்ளன.

## ஒருவருக்காக அல்ல




ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் ஒருவரான அமரர் து.வைத்திலிங்கம் எழுதிய 24 சிறுகதைகளின் தொகுப்பான "ஒருவருக்காக அல்ல" நூல் வெளியிடப்பட்டுள்ளது.

அறுபதுகளின்-நாற்பதுகளின் முன் எழுதப்பட்ட இந்தச் சிறுகதைகள் அன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தின் யதார்த்த சித்திரிப்புக்கள், மத்திய தர மற்றும் அடிநிலை மக்களுடைய வாழ்க்கையை ஒரு கலைஞருக்கே உரிய அவதானிப்புக்களுடன் "வைத்தி" தருகிறார். எழுது வினைஞர், ஆசிரியர், ஓய்வூதியர், சுருட்டுத் தொழிலாளர், கார்ச் சாரதிகள், தாதியர்கள், கள்ளிறக்குவோர் முதலிய பாத்திரங்கள் கதைகளில் உலா வருகின்றன. இப்பாத்திரங்களின் பலமும் பலவீனமும் ஒரு சத்தியவேட்கையோடு வாசகன் முன்வைக்கப்படுகின்றான் என்று கவிஞர் சோ.பத்மநாதன் தனது அணித்துறையில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

து.வைத்திலிங்கத்தின் "ஒருவருக்காக அல்ல" சிறுகதைத் தொகுப்பு பலருக்காக அதாவது எமது கடந்தகால சமூக அதிர்வுகளை அறியக் கூடியதொன்றாக விளங்கும் என்பதில் ஐயமுறத் தேவையில்லை.

## புதிய பொது அறிவு




வேதநாயம் தபேந்திரன் எழுதிய "புதிய பொது அறிவு" நூல் வெளிவந்துள்ளது. சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான வழிகாட்டி நூலாக இது அமைந்துள்ளது.

புதிய கல்வி சீர்த்திருத்திற்கு அமைவாக உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொது அறிவு சம்பந்தமான வினாக்களும், விடைகளும் மற்றும் அனைத்துப் போட்டிப் பரீட்சைக்கான வினா, விடை அமைப்புக்களுடன் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தான் பெற்ற கல்வியின் அனுபவத்தினால் பெற்ற அறிவினைப் பயன்படுத்தி இந்நூலை எழுதியுள்ளார். போட்டிப் பரீட்சைகள், உள் நுழைவுத் தேர்வுகள் என்பவற்றுக்கு தோற்றுவோருக்கு இந்த நூல் கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேல் பெரும் உதவியாக அமைந்து வருகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைமத்துவப் பீட பீடாதிபதி க.தேவராஜா தனது அணிந்துரையில் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

## செந்தில் முருகையா காதை




வட்டுக்கோட்டையூர் கலாபூசணம் புவன சுந்தரம் ஆக்கியுள்ள வட்டூர் வெப்பட்டி ஒல்லை "செந்தில் முருகையா காதை" நூல் வெளியிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை வெப்பட்டியொல்லை செந்தில் முருகையா தேவஸ்தானத்தின் சிறப்புக்களைத் துல்லியமாக இந்நூல் எடுத்துச் சொல்கிறது. அத்துடன் ஆலயத்தில் நடைபெறுகின்ற உற்சவகாலச் சிறப்புக்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஆலயச் சிறப்புக்களை சந்தக்கவி ஊடாக காதை வடிவில் நூலாசிரியர் சொல்லியிருக்கும் விதம் இறையுணர்வினையும், கவியுணர்வினையும் வாசிப்போர் மனங்களில் உண்டு பண்ணுகிறது.

# வாசகர் திருமுகம்

## சுனாமி பற்றிய எதிர்வுகூறல் சரியா-தவறா?

எதிர்வரும் 22.07.2009 அன்று சுனாமித்தாக்கம் ஏற்படலாம் என்று இந்திய எண் சோதிடரும் நாசா விஞ்ஞானிகளும் எச்சரித்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. அதேவேளை இது மூடநம்பிக்கை என்று மறுநாள் செய்தியொன்று வந்தது.

வானியல் ஆய்விலும் அனர்த்தங்களை எதிர்கொள்வதிலும் நாம் எவ்வளவு பின்தங்கியுள்ளோம் என்பதனை இச்செய்திகள் எமக்குப் புலப்படுத்துகின்றன.

இரண்டு காந்தங்களுக்கு இடையே சிறு இரும்பு ஆணி ஒன்று நிலையாக நிற்பதனையும் அதில் ஒரு காந்தத்தினை மற்றைய காந்தத்திற்கு அருகில் கொண்டு செல்லும்போது அந்த ஆணி நகருவதனையும் எளிய பரிசோதனைமூலம் அறியலாம். இங்கு ஆணி நகருவதற்குரிய விசை, காந்தப்புல மாற்றத்தால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறே விண்ணில் உள்ள கோள்கள் ஒரே நேர்கோட்டில் அமையும்போது அவற்றினால் பூமிக்கு ஏற்படும் மின்காந்தத் தாக்கம் அதிகமாக இருக்கும். இவ்வாறு ஒரே நேர் கோட்டில் வரும் சந்தர்ப்பங்கள் அமாவாசை, பௌர்ணமி தினங்களாக அமையலாம். எனவே இச்சந்தர்ப்பத்தில் ஏற்படும் விசை பூமிப்பந்தின் உள்ளே உள்ள உருகுநிலை மூலகங்களில் பிளவினை ஏற்படுத்தலாம். குறிப்பாக அணுசக்தியினை வெளியிடும் யுரேனியம் தோறியம், புளுட்டோனியம் போன்ற மூலகங்கள் பிளவடையும்போது அதிகளவு சக்தி வெளியிடப்படும். இச்சக்தியானது புவியோட்டின் நலிந்த பகுதியினூடாக புவியின் மேற்பரப்பிற்கு கடத்தப்படலாம். இவை எரிமலைகளாகவோ புவி நடுக்கமாகவோ மாற்றமடையலாம். இவை கடலின் அடியில் வெளிப்படும்போது கடல் நீருக்கு பாரிய விசையை செலுத்துகின்றது. இது சுனாமி அலைகளாக மாற்றம் அடைகின்றது.

எனவே கடல்கோள் எதிர்வு கூறல் நிகழ்வு ரீதியில், விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடியது. ஆனால் அதிலிருந்து வெளிவரும் சக்தியின் அளவினை எதிர்வு கூறுவது கடினம். எனவே எதிர்வரும் 22 ஆம் திகதியும் ஓர் எச்சரிக்கைக்கு உரிய தினமாக இருக்கலாம். அன்று கடல்கோள் உருவாக 2 காரணிகள் ஏதுவாக அமையலாம். முதலாவது பூமிப்பந்தில் ஏற்படும் மின்காந்த மாற்றத்தின் கருப்பிளவு சக்தியில் எத்தனை சதவீதம் பூமியின் மேலோட்டிற்கு கடத்தப்படுகின்றது. இரண்டாவது பூமியின் எப்பகுதியில் சக்தி வெளிப்படுகின்றது. இது இலங்கையில் இருந்து தூர அமையின் சுனாமி எச்சரிக்கையை அனுசரிப்பது இலகுவாக அமையும். மேலும் ஏற்படக்கூடிய நில நடுக்கத்தின் அளவு 9 றிச்சட்ஸ் விட அதிகமாயின் கட்டாயம் சுனாமி அலைகள் எமது கரையை அடையும்.

டாக்டர் [illegible]

# மக்கள் சேவையில் மகிழ்ந்தவர் நவாலியூர் சதீஷ்



நவாலியூர் செ.சதீஷ் 16.11.2008இல் இறையடி சேர்ந்து ஏழு மாதங்கள் முடிவடைந்துள்ளன. வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தரம் -I சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றி திருமண பந்தத்தில் ஈடுபட்டு மறுநாள் மாலை இறையடி சேர்ந்தது யாவரும் அறிந்ததே.

சதீஷ் எனும் சிறுவன் வயதில் சிறியவனாக இருந்தாலும் அவரது சேவை, மக்களுடன் அவர் கொண்டிருந்த உணர்வுத் திறன், உதவி செய்யும் மனப்பான்மை என்பவை ஒரு கணம் மீட்டுப்பார்க்கப்பட வேண்டியவை.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவனான சதீஷ்-

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரி (Diploma in Management - OUSL) ஆவார்.

01.08.1998 சமுர்த்தி அதிகார சபையினால் "புத்துயிராக்வோர்" நியமனம்பெற்று, பின்னர் 01.12.1999 இல் தரம் I சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராக நியமனம் பெற்ற சதீஷ்-நவாலி வடக்கு பகுதியில் தனது வறிய மக்களின் நல்வாழ்வுக்காக தன்னாலான அனைத்துப் பணிகளையும் இரவு-பகலாக மேற்கொண்டவர்.

மக்களின் தேவைகளை பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலரின் கவனத்திற்குக் கொண்டு வந்து சீரிய பணியாற்றிய சதீஷ்-

இடம்பெயர்ந்த மக்கள், விசேட தேவைக்குரியவர்கள், ஆதரவற்ற சிறுவர்கள் எனப் பலருக்கும் உதவிய தன்னலமற்ற பணியாளன்.

## நீத்தார் நயப்புரை

இவரது தந்தையான அமரர் கணபதிப்பிள்ளை செல்வராஜா அவர்களும் கிராம தலைவனாக, கிராம அலுவலராக மக்கள் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை 1976 இல் மாரடைப்பினால் பலியானவர். அப்போது சதீஷ் பிறந்து 3 மாதங்கள் மட்டுமே ஆகியிருந்தன.

இவரது சகோதரி செல்வி ஹேமலதா செல்வராஜா அவர்களும் கிராம அலுவலராகச் சேவையாற்றிக் கொண்டிருந்தபோது 09.07.1995 இல் நவாலியில் சென்.பீற்றர்ஸ் விமானத் தாக்குதலில் சேவையின்போது பலியானவர்.

இவர்கள் மூவரும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் மக்கள் கடமையின்போது மரணித்தவர்கள் என்பதனை நினைத்துப் பார்க்க நெஞ்சம் துணுக்குறுகிறது.

அமரர் செ.சதீஷ் நவாலி வடக்கில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும்போது அதிகளவிலான சிறுகுழுக்கள் , சமுர்த்தி சங்கங்கள் ஸ்தாபித்தல், மக்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல் போன்ற செயற்பாட்டை மிக வினைத்திறனுடன் மேற்கொண்டவர்.

இதற்காக அன்றைய வலி.தென்மேற்கு சண்டிலிடிப்பாய் பிரதேச செயலர் திரு.எஸ்.செல்வராஜா அவர்களால் "மெச்சுரை" வழங்கி பாராட்டப்பட்டவர். பின்னர் ஜே/133 ஆனைக்கோட்டை கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி பணியைத் தொடர்ந்தார்.

சதீஷ் அவரது சகோதரி ஞாபகார்த்த சிறுவர் நிலையத்திலும் (HSCMF)இணைந்து சீரிய பணியாற்றியவர்.

மேலும் சிறுப்பிட்டியில் இயங்கிவரும் ஹேமா பழரச கைத்தொழில் (Hema Industry) நிறுவனத்திற்கான (Rest-joy)இயந்திர சாதனங்கள் உருவாக்குவதில், புதிய இயந்திர சாதன கண்டுபிடிப்புக்கள் மற்றும் பழரசம், ஜாம் உற்பத்திகளிலும் கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுநராக சதீஷ் கடமையாற்றியதுடன்-

ஸ்கிரீன் பிரிண்டிங் (Screen Printing) உற்பத்தி தொழிலிலும் கைதேர்ந்த வல்லுநராக தொழிற்பட்ட சகலகலா வல்லவனாக சிறுவயதில் செயல்பட்ட செயல்வீரன் இன்று எமது மண்ணில் இல்லை. சதீஷ் அவர்களது குறிப்பேடுகளைத் தொட்டுப் பார்த்தால் அங்கு ஊனமுற்றவர்கள், இயலாதவர்கள், வீடு இல்லாதவர்கள், கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்ற சிறுவர்கள் எனப் பலரது பெயர், விலாசம், வயது மற்றும் விவரங்கள் இன்று தொட்டும் நிற்கின்றன.

சதீஷ் மரணித்து விட்டாலும், மறைந்த பின்னும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

சண்டிலிப்பாய் — வை.செகராஜசிங்கம் (ச.நீ)



ஈ.பி.டி.பி . செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சின் பேரில் யாழ் மவட்டத்தைச் சேர்ந்த 8 பேர் சமாதான நீதிவான் பதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். பணிமனையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் நெடுந்தீவைச் சேர்ந்த சில்வேஸ்திரி அலன்டின், மானிப்பாயைச் சேர்ந்த ஆர். குமாரகுலசிங்கம், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த என். ஆனந்தராஜா, வேலணையைச் சேர்ந்த ஆர். கந்தையா, அரியாலையைச் சேர்ந்த வே.ஜெயவிந்தன், சுன்னாகத்தைச் சேர்ந்த த.சண்முகராஜா, மானிப்பாயைச் சேர்ந்த ஏ.திருவிளங்கம், சித்தங்கேணியைச் சேர்ந்த கு. சிவஞானம் ஆகியோரே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து இலங்கை நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட சமாதான நீதிவான் களுக்குரிய பதவிக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டவர்களாவர்.

சமாதான நீதிவான் பதவிபெற்றவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(9)

# மக்கள் முகம்



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி சிரேஷ்ட கணித ஆசிரியர் வேலுப்பிள்ளை சண்முகலிங்கம் தமது முப்பத்தேழு வருட ஆசிரிய சேவையில் இருந்து கடந்த மாதம் 22ஆம் திகதி (22.05.2009) ஒய்வு பெற்றுள்ளார். வெறுமனே பாடசாலைக் கற்பித்தலுடன் மட்டும் நின்று விடாது குடாநாட்டு மாணவர்களின் கணிதபாட அறிவை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்தவர் அவர்.

குறிப்பாக 1990 களில் கோப்பாய் மகாவித்தியாலய வளாகத்தில் இயங்கிய கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றி கணித பாட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காக கணித பாட சுயகற்றல் உபகரணங்களை அறிமுகப்படுத்தினார்.

அத்துடன் துணுக்காய் கல்வி வலயத்தில் கணித பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகவும் கடமையாற்றியுள்ளார்.

மற்றும் அண்மையில் கூட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கணித பாட அறிவை மேம்படுத்துவதற்காக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் ஆலோசனையுடன் கணித பாட சுயகற்றல் இறுவெட்டு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் தற்போதைய பருத்தித்துறை சாரணர் மாவட்ட உதவி ஆணையாளராக செயற்பட்டு பாடசாலைகளில் மறைந்து கொண்டிருக்கும் சாரணிய இயக்கத்துக்கு உயிர்ப்பூட்டியவர். குறிப்பாக கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் சாரணிய இயக்கத்தை வளர்ப்பதில் அரும்பணியாற்றியுள்ளார்.

சு. சிவநேசராசன்
ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

* * *

சுழிபுரம் தபால் நிலைய அதிபராக பேரின்பம் இன்பராசா இம்மாதம் முதல் கடமையை பொறுப்பேற்றுள்ளார்.

இவர் முன்பு சங்கானை, வட்டுக்கோட்டை, காரைநகர் ஆகிய தபாலகங்களில் கடமை புரிந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (9-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் விதாதா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலிகாமம் மேற்கு, சங்கானைப் பிரிவில் அண்மையில் மூன்றுநாள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கடதாசிக் கூழிலிருந்து உருவங்கள் அமைப்பது பற்றி வளவாளரினால் பயிற்சியாளருக்கு செய்முறை விளக்கம் அளிக்கப்படுவதையும், பயிற்சியில் பங்கேற்றவர்களையும் காணலாம். (29)



சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாவது குருபூசை நிகழ்வுகள் கைதடி அரச முதியோர் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றன.

திருவுருவப் படத்திற்கு இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், இல்ல முதியோர்கள் சமயப் பிரார்த்தனையில் ஈடுபடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்:நந்தன்)




யாழ்.றோட்டறிக் கழகத்தால் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான ஜி.சீ.ஈ.உயர்தர மற்றும் சாதாரண பரீட்சை வழிகாட்டல் புத்தகங்கள், யாழ்.மாவட்ட மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட உடுபுடைவைகள் றோட்டறி நிலையத்தில் வைத்து அருட் சகோதரியிடம் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.



கந்தர்மடம், பழனி வீதியில் அமைந்திருக்கும் தான்றோன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்காக 66 ஆயிரம் ரூபாவை இந்து அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளிடம் கையளித்தனர்.



மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணியாளர்கள் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் சுற்றாடல் பகுதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். (224)



யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திர ஆக்கத்திறன் போட்டிகள் வலய முகாமைத்துவ மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். (படம்:கோப்பாய் செய்தியாளர்)



கோண்டாவில் ஆசிமடம் அரசடி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ தெட்சணாமூர்த்தி வழிபாட்டு நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் திருமதி மனோன்மணி குலசிங்கம் நல்லை ஆதீன முதல்வர் மூலம் ஆலய பரிபாலனசபைத் தலைவர் இ.பாலசுந்தரத்திடம் முதற்பிரதியைக் கையளிக்கின்றார். [illegible]



தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் கணனி அலகுத் திறப்பு விழாவில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ்.மாவட்ட கல்வி இணைப்பாளர் எஸ்.முத்துராஜா உரையாற்றுகிறார். வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், பாடசாலை அதிபர் வ.கணேசமூர்த்தி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (படம்:சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் மங்கள விளக்கேற்றி வைத்தார். சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி, பாடசாலை அதிபர் திருமதி ச.சிவகுமார் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

திருமதி பத்மினி வசந்தசேனன் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் மாணவரின் சிறுவர் நாடகக் காட்சியையும் இங்கு காணலாம். (29)

## வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட வேண்டியவற்றின் விவரம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூலை18

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவேண்டியவற்றின் விவரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அ.யோகநாயகம் கேட்டுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

அதில் உதவிப் பிரதேச செயலர் கலந்துகொண்டு பேசுகையில்:

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மின்சாரம் இல்லாத பொது இடங்களிலும் விவசாய வீதிகளிலும் மின்சாரம் தேவைப்படுவதால் சம்பந்தப்பட்டோர் மதிப்பீடுகளை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் கட்டாயக் கல்வி தொடர்பாக வீட்டுக்கு வீடு ஆய்வு நடைபெற்று வருகின்றது.

இதனைக் கிராம அலுவலர் தலைமைப் பீடம் மேற்பார்வை செய்யும்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவேண்டிய பாடசாலைகளின் விவரங்களை வழங்குமாறு உதவிப் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் நவாலி - கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்க திட்டத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் அதற்கான புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் 47 அதிகாரிகள் பங்குபற்றியிருந்தனர். (203-302)

## உணவுக்கான இலகு வேலைத் திட்டத்தின்கீழ் நவாலி வடக்கில் 15 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை18

இலகு வேலைத் திட்டத்தின்கீழ் நவாலி வடக்கில் முன்னுரிமைப் பிரகாரம் 15 வீதிகள், வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த அபிவிருத்திக்கான நடைமுறைகளை நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் ஒழுங்குபடுத்தியுள்ளார்.

இதன் முதற்கட்டமாக உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த வெள்ளை அட்டை நிவாரணம் உடனடியாக நிறுத்தப்பட்டு இலகு வேலைத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நிவாரணம் பெறுபவர் மாதத்தில் 11 நாள்கள் ஆகக் குறைந்தது வேலை செய்யவேண்டும்.

முன்னுரிமைப் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படவுள்ள வீதிகள், வாய்க்கால்கள் விவரம் வருமாறு:

நவாலி வெள்ள வாய்க்கால், சங்கரத்தை பிரதான வீதி , நவாலி வடக்கு - புலவர் வீதி, நவாலி வடக்கு நாச்சிமார் வீதி, தலுவில் - வரகுசாட்டி வீதி, பெத்தனாச்சியார் ஆலய வீதி, குதனை வீதி, கிழக்கு வைரவர் கோயில் வீதி, நவாலி திருச்சபை வீதி, அட்டகிரி முருகன் வீதி,நவாலி வடக்கு - பெத்தனாச்சியார் வீதி, இருதய ஆண்டவர் வீதி, நவாலி மயானம்,கல்லுண்டாய் வெள்ள அணை அமைத்தல்,அட்டகிரி வெள்ள வாய்க்கால்.

(203-302)

## வெளிமாவட்டங்களுக்கு கலைப்பொருள்களை கொண்டு செல்ல அனுமதி பெறவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூலை18

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து பெறுமதிமிக்க கலைப்பொருள்களை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்குப் பிரதேச செயலரின் அனுமதி பெறப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைநுட்பம் மிக்க ஆலய வாகனங்கள், பெறுமதிவாய்ந்த தளபாடங்கள், பழைய பெட்டகங்கள், பெட்டிகள் கொண்டு செல்வதாயின் பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பித்துப் பிரதேச செயலர் நேரடியாகப் பார்வையிட்ட பின்னரே அனுமதி வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிற்பாலயங்களில் பயன்படுத்தும் புதிய சிற்பங்களும் வெளிமாவட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கும் அனுமதி பெறப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

தொழில்சார் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தால் இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை - முதலாம் வகுப்பு பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் உரிய விண்ணப்பப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்பதாக 'செயலாளர், தொழில்சார் தொழில்பயிற்சி அமைச்சு, நிபுணத்தாபியச, இல.354/2, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு - 5' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை 10.07.2009ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (201)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை18

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப 2004, 2005, 2006, 2007, 2008, 2009 ஆகிய வருடங்களுக்கான இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு 'ஆ' மற்றும் வகுப்பு II பிரிவு 'அ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அடுத்தமாதம் 9ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு முன்பதாக பரீட்சை 'ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக்கள், வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)




## பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு இணைப்பு விரிவுரையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு இணைப்பு அடிப்படையில் விரிவுரையாளர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்காக இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழில்சார் கல்வி, தமிழ், சமயம், கணிதம், விஞ்ஞானம், றோமன் கத்தோலிக்கம், சமூகக்கல்வி, இஸ்லாம், சிங்களம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்குத் தமிழ்மொழிமூல விரிவுரையாளர்களும் -

தொழில்சார் கல்வி, ஆங்கிலமொழியியல் போன்ற ஆங்கிலமொழி மூல விரிவுரையாளரும் இணைத்துக்கொள்ளப்படவிருக்கின்றனர்.

இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாகச் சுயவிவரத்தினை எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் 'அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் ஆசிரியர்கள் தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரால் முறைப்படி விடுப்புப் பெற்றுத் தருவதை உறுதிப்படுத்தவேண்டும்.

பட்டச் சான்றிதழ், கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி, பாடத்துறை சார்ந்த தொழில் தகைமைகள், செயற்திறன்கள், சமூக இசைவாக்கம் போன்ற ஆவணங்கள் முக்கியமாகக் கருதப்படும் எனப் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (204)

## திருமுறைப் பாராயண படிப்பு பூர்த்தி நிகழ்வு

வலி.வடக்கு,ஜூலை18

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்று வந்த திருமுறைப் பாராயணப் படிப்பு பூர்த்தி நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத் திருமுறை மண்டபத்தில் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற திருமுறைப் பாராயணப் படிப்பு பூர்த்தி வைபவம் ஆலயத் தேவஸ்தான சபைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமுறைப் பாராயணப் படிப்பில் ஈடுபட்டவர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (1-86)

## இந்த மண்ணைப் பெருமைப்படுத்திய கலைஞர்களை கௌரவிக்க வேண்டியது எல்லோரதும் கடமையாகும்

## நூல் வெளியீட்டு விழாவில் அரச அதிபர்



நல்லூர்,ஜூலை18

இந்த மண்ணைப் பெருமைப்படுத்திய எமது கலைஞர்களை இனங்கண்டு அவர்களைப் பெருமைப் படுத்தவேண்டியது எங்கள் எல்லோரதும் கடமையாகும்.

மனித வாழ்வுக்கு மெருகூட்டியவர்கள் அவர்கள்.

கலைஞர் விவரத் திரட்டு நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய யாழ்.மாவட்ட கலாசார பேரவையின் தலைவரும் அரச அதிபருமான கே.கணேஷ் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் கலைஞர் விவரத் திரட்டு தொகுதி I வெளியீட்டு விழா இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய அரச அதிபர் கணேஷ் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:

கலைகளின் தேவை எமது கலைஞர்கள் அதற்காக ஆற்றிய சேவை ஆகியவற்றை நாளைய தலைமுறை தெரிந்துகொண்டால் தான் அந்தக் கலைகளைத் தொடர்ந்து பாதுகாக்கமுடியும்.

இந்த நூலின் மூலம் பெருமைக்குரிய எமது கலைஞர்களின் திறமைகள் அவர்கள் கலைக்காற்றிய பங்களிப்புக்கள் ஆவணப் படுத்தப்படுகின்றன.

இந்த நூல் வெளிவரவேண்டும் என்பதற்காகப் பெரும் பணியாற்றியவர் இன்று வடக்கு மாகாணத்தின் செயலாளராக இருக்கும் ஆ.சிவசுவாமி.

அவரதும் பிரதேச செயலவர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கலாசார பேரவை உறுப்பினர்கள் அனைவரதும் முயற்சியால் உருவான இந்த கலைஞர் விவரத்திரட்டு முழுமையானதாக இல்லாமல் உரிய தகவல்கள் கிடைக்காத நிலையில் அடுத்து வரும் தொகுப்புகளில் அது கவனிக்கப்படும் - என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா உரையாற்றுகையில்:

நமது எழுத்தாளர்களின் பல்வேறு துறைகள் குறித்தும் ஆய்வுகள் செய்யப்படவேண்டும்.

இங்கே 1850இல் முதல் தடவையாக புகைப்படக்கருவி வந்து சேர்ந்தபோது தங்களைப் படம் எடுத்துக்கொள்ள எவரும் முன்வரவில்லை. புகைப்படம் எடுத்தால் மரணம் சம்பவித்துவிடும் என்ற அச்சம் அன்று மக்களிடையே இருந்துள்ளது.

அதனால் எத்தனையோ அறிஞர்களை நாம் காணமுடியாது போய்விட்டது.

கலைஞர்களை, எழுத்தாளர்களை அவர்களின் மறைவின் பின்னரே கௌரவிக்கின்றோம்.

எம் மத்தியில் வாழும் கலைஞர்களுக்கு நாங்கள் பேணும் அம்சங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

கலாசாரப் பேரவை எமது கலைஞர்களைக் கௌரவிக்கவும் அவர்கள் குறித்த ஆவணங்களை வெளியிடவும் நடவடிக்கை எடுத்துள்ளமை பாராட்டப்படவேண்டியது. இனிவரும் காலங்களில் இவர்கள் போற்றப்படுவார்கள் - என்றார்.

மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், அருட்திரு எக்ஸ்.ஜெயசேகரம் அடிகளார் உட்பட பலர் உரையாற்றினர். (203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் திடீர் நடவடிக்கையால் பருத்தித்துறையில் கசிப்பு கைப்பற்றப்பட்டது

கரவெட்டி, ஜூலை18

பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திப் பொருள்களைக் கைப்பற்றியதுடன் அங்கிருந்தவர்களையும் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

குறிப்பிட்ட வீட்டிலிருந்து 115லீற்றர் கசிப்பு மற்றும் உற்பத்திப் பொருள்கள் என்பன கண்டுபிடிக்கப் பட்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸார் பருத்தித்துறை நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (203-70)

## மெய்வன்மைப் போட்டி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினரதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினரதும் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம், பிரதம விருந்தினராகவும் கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலய அதிபர் ச.வாமதேவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

## 'கலை ஞானம்' நூல் வெளியீட்டு விழா

நல்லூர் பிரதேச கலாசார பேரவையின் 'கலைஞானம்' கலைஞர் விவரத்திரட்டு வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப.2.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடை பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் கலந்து கொள்வார். (204-111)

## சாவகச்சேரியில் போக்குவரத்துப் பொலிஸாரின் பணி ஆரம்பம்

போக்குவரத்து விதிகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் முக்கியமான சந்திகளில் நின்று விதிமுறைகளை மீறுவோர் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (1-207)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 . 11 . 1926



மறைவு 15 . 06 . 2009

### அமரர் பாலசிங்கம் தெய்வானைப்பிள்ளை

(முன்னாள் உரிமையாளர், மனோகரா அரிசி ஆலை)

கடந்த 15.06.2009 அன்று எங்கள் குடும்ப ஒளிவிளக்கு பாலசிங்கம் தெய்வானைப்பிள்ளை சிவபதமடைந்த செய்தியறிந்து எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் அனுதாபத்தை வழங்கியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (19.07.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

"பபி அகம்",சாரியன் அரசடி,
கரவெட்டி. தொ.பே.:2264122

குடும்பத்தினர்.

(87067)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 10 . 1953



மறைவு 18 . 07 . 2000

### அமரர் கந்தசாமி தர்மேசன்

(திட்டமிடல் உதவியாளர்- வலிகாமம் கல்வி வலயம், சாரண உதவி ஆணையாளர்- காங்கேசன்துறை)

நவராத்திரியில் வணங்கினால்
சக்தியின் அருள் கிடைக்கும்
ஒன்பது ஆண்டுகள் தவமிருந்தும்
உன்னை காணமுடியவில்லையே.

"தரன் இல்லம்",
தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

அன்பான மனைவி,
முத்தான
முத்தரன்கள்.

(87036)

## நீங்காத நினைவலைகளோடு...

ஐந்தாம் ஆண்டு

மலர்வு 29.11.1952



உதிர்வு 11.08.2004

அமரர் இளையதம்பி அமிர்தலிங்கம் (அமுது)
(அமுதர் கல்லுடைக்கும் ஆலை ஸ்தாபகர்)
திதி: ஏகாதசி (18.07.2009)

பத்தொன்பதாம் ஆண்டு

மலர்வு 17.07.1986



உதிர்வு 17.03.1990

செல்வி
அபிதா அமிர்தலிங்கம்

ஆருயிர் அப்பாவே!
சுற்றத்தவரின் இனிய அமுதே;
என்றும் உங்கள் நினைவோடு வாழும்.

அன்பின் சகோதரியே!
பிரிந்துன்னை வருடம்
பத்தொன்பதானதோ!

உமையவள் உறை, கோப்பாய் தெற்கு.

பாசமுள்ள குடும்பத்தினர்.

(87093)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி சீனிவாசகம் பாக்கியலட்சுமி

மலர்வு: 22.11.1944 உதிர்வு: 19.06.2009

கடந்த 19.06.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (19.07.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
சுழிபுரம் கிழக்கு,சுழிபுரம்.

பிள்ளைகள்.

(87048)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையாக 24 . 12 . 1935



தெய்வமாக 18 . 06 . 2009

### திருவாட்டி வரதலெட்சுமி இராசேந்திரம்

(2ஆம் வட்டாரம், மண்டைதீவு)

எங்கள் அருமை அம்மாவே!
நீங்கள் மறைந்து போன மாயமென்ன?
தோளோடும், மார்போடும் தாங்கி எமை வளர்த்தீர்கள்
தாலாட்டிச் சீராட்டி, தளராது மனம் சலியாது வகையாக
உணவளித்து வண்ணமுறக் காத்தீர்கள்!
மாதம் ஒன்று ஆனதுவோ? பிரியா விடை பெற்று- நீங்கள்
பிரிந்து போன தெங்கே? அம்மா!

"மஞ்சுளா பவனம்",
4ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(87083)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் அனைத்துப் பிரஜைகளும் கௌரவமாக வாழ்வதற்கு இத்தேர்தல் உதவும்

## ஐ.தே.கவின் கொள்கை அறிக்கை இது

### யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.க. விடுத்துள்ள கொள்கை விளக்கம் இது

யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் உங்களுக்கான மாநகரசபைத் தலைவரை, மாநகரசபை உறுப்பினர் குழுவை உங்கள் வாக்குகளால் தெரிவுசெய்வதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. யாழ்ப்பாண மாந கரசபை மிகவும் பழமையான, நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் அமைப்பாகும். எமது யாழ்ப்பாண மாநகர சபை கொழும்பு மாநகர சபையைப் போல் மிகவும் கண்ணியமும், முக்கியத்துவமும் வாய்ந்ததாகும். யாழ்.குடாநாட்டில் மட்டுமன்றி இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரதும் கௌரவத்தையும், அபிமானத்தையும் வெளிப்படுத்துவது இந்த மாநகர சபையென்றால் அது மிகையாகாது. கடந்த காலங்களில் மிகவும், சிரேஷ்ட, முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்த் தலைவர்கள் யாழ். மாநகரசபையில் தலைமைத்துவம் வகித்துள்ளார்கள்.

ஐக்கியதேசியக் கட்சி உருவானது சிங்களத் தலைவர்கள் மட்டுமன்றி தமிழ்த் தலைவர்கள் பலரதும் பங்களிப்புடனேயே யாகும். ஐக்கிய தேசியக் கட்சி எமது நாட்டின் இனவாதம், அடிப்படைவாதம் எதுவுமற்ற அரசியல் கட்சி என்பது அனைவருக் கும் தெரிந்த விடயமாகும். இலங்கையில் தேசிய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும், உரிமைக்காகவும் மேற்கொண்டுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து தமிழ் மக்களும் நன்கு அறிவர். ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கீழ் வாழும் தமிழ் மக்கள் பயம், பீதி, சந்தேகம் எதுவுமின்றி சுதந்திரமாக சிங்கள, முஸ்லிம் பிரஜைகள் போல் சமஅந்தஸ்துடன் வாழ்வார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அதைக் கடந்த காலத்திலும், அண்மைக்காலத் திலும் காணக்கூடியதாகவிருந்தது. கண்டிப்பாக இதை எதிர்காலத்திலும் காணக்கூடியதாகவிருக்கும்.

உங்கள் பெறுமதிமிக்க வாக்கைப் பயன்படுத்தாது மட்டும் இருந்துவிட வேண்டாம். அது உங்கள் ஜனநாயக உரிமை யாகும். அந்த உரிமையை நீங்கள் நிராகரித்தால் தீய அரசியல்வாதிகளால் உங்கள் வாக்கு திருடப்படும். அதைத் தவறான வழியில் உபயோகப்படுத்துவார்கள்.

நீங்கள் வாழும் சூழலில் உங்கள் விருப்பின்படி உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களைத் தெரிவு செய்யும் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிடாதீர்கள்.

உங்கள் வாக்குகளை எமது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளித்தால்,?? அன்று நிகழ்ந்தவற்றை ஒருமுறை ஞாப கப்படுத்திப் பாருங்கள்.

**✱ எமது தமிழ் மக்கள் பயம், பீதி, சந்தேகம் இன்றி சமஅந்தஸ்துடைய பிரஜையாக கௌரவமாக வாழ்வதற்குரிய சூழலை உருவாக்குவோம் என்று உறுதி கூறுகின்றோம்.**

**✱ எமது ஐக்கிய தேசியக் கட்சி சமூகத்தின் நியாயமான நடைமுறைகளுக்காக முன்நிற்பதில் தவறுவதில்லை.**

பல தசாப்த காலங்களாக எமது தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற துயரங்கள், அல்லல்கள், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், துரோகங்கள் போன்றவற்றை ஐ.தே.க நன்கு அறிந்து வைத்துள்ளது. நாம் ஆட்சிக்கு வந்தால் அவை அனைத்துக் கும் முற்றுப்புள்ளி வைப்போம். உடனடியாகத் தமிழர்களுக்கான நியாயமான, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைப் பெற்றுத்தருவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கடந்தகால வரலாற்றில் தமிழர்க ளுக்கு இடையூறுகளற்ற, சுதந்திரமான முன்னெடுப்புக்களை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வந்ததை நீங்கள் அறிந் திருப்பீர்கள். அது தொடர்பாகவும் உங்கள் கவனத்தைத் திருப்பவிரும்புகின்றோம்.

**✱ 2002 பெப்ரவரி 22ஆம் திகதி யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.**

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின் எமது தமிழ் மக்களுக்கு கிடைத்த சுதந்திரம், நிம்மதி, நிறைவு சொல்லியடங்கா. ஆயினும் அவற்றை முழுமையாக அனுபவிப்பதற்கு தமிழர்களுக்குக் கிடைத்த காலம் குறுகிய 2 வருடங்க ளேயாகும். அதற்குக் காரணம் சட்டபூர்வமான நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்பின் மூலம் ஜனாதிபதி யால் எமது ஆட்சி கலைக்கப்பட்டதேயாகும்.




யுத்தநிறுத்த உடன்படிக்கையுடன் பல பொலிஸ், இராணுவ சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டன. A9 வீதி திறக்கப் பட்டது. வவுனியாப் பயணத்திலிருந்த பாஸ் முறை அகற்றப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு அத்தியாவசிய பொருள்களான உணவுப்பொருள்கள், டீசல், மண்ணெண்ணெய், மருந்துப்பொருள்கள் அதிகமாகப் பரிமாற்றப்பட்டன.

யாழ்.குடாநாட்டில் மட்டும் 2 வருடங்கள் என்ற குறுகிய கால வட்டத்திற்குள் யுத்தத்தால் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த 40 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டன. வடக்கிற்கு சர்வதேச முதலீடு பெருகி வழிந்தது.

**✱ ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் முதன்முறையாக புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது.**

இந்த அமைச்சு வடக்கிற்காகவே தனியாக உருவாக்கப்பட்ட புதிய அமைச்சாகும். இந்த அமைச்சுக்குள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்கள் உள்ளடக்கபட்டன.

அச்சந்தர்ப்பத்தில் இந்த அமைச்சின் அமைச்சராக, விஷேடமாக தனக்கு ஏற்பட்ட கொலை மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றை தூக்கியெறிந்துவிட்டு, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்காக செயற்பட்ட, செயற்பட்டுக்கொண்டிருக்கும், செயற்படப்போகும் தெற்கின் மனிதாபிமானமுள்ள அரசியல்வாதியான டாக்டர் ஜயலத் ஜயவர்தனவே அமர்த்தப்பட்டி ருந்தார். அவர் தொடர்பாக கௌரவ ரணில் விக்கிரமசிங்கவின் இதயத்திலிருந்து வெளிப்பட்ட வரிகள்.....

**டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோது எனது வழிகாட்டலின்கீழ் அவர் கொடிய யுத்தத்தின் மத்தியிலும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்து மக்களைச் சந்தித்தார். தனது உயிருக்கு ஆபத்து நேரிட்ட பொழுதும் கூட மக்களின் மனதை வென்று அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்.**

**வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக அவருக்கு புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை மற்றும் அகதிகள் விவகார அமைச்சுப் பதவியை வழங்கினேன்.**

**அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழியில் சென்று வடக்கிலும் தெற்கிலுமுள்ள மக்களுக்கி டையிலான ஒற்றுமையைப் பேணுவதற்காக அளவற்ற இன்னல்களுக்கு முகம் கொடுத்து மக்களின் ஐக்கியத்திற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.**

**அவர் வடக்கிலும் தெற்கிலுமுள்ள மக்களை ஒன்றிணைக்கும் முன்னோடி ஆவார்.**

டாக்டர் ஜயலத் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது வடக்கு, கிழக்கில் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் வருமாறு.

✱ A9 வீதி திறக்கப்பட்டது,

✱ சுன்னாகம் டீசல் இயந்திர மின்சார பாவனை அறிமுகப்படுத்தப்பட்டது

✱ யாழ்ப்பாணம் முழுதும் மின்சாரம் வழங்கப்பட்டது

✱ யுத்தத்தால் அழிக்கப்பட்ட 40 பாடசாலைகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் முதலீட்டில் புனரமைக்கப்பட்டன.

✱ கையடக்கத் தொலைபேசி வசதி முறை அமுல்படுத்தப்பட்டது

✱ யாழ்ப்பாண நூலகச் செயற்பாடுகளுக்குத் தேவையான கணனி, மரத் தளபாடங்கள் போன்றவை பெற்றுக் கொடுக்கப்பட்டன.

✱ யாழ்ப்பாண அபிவிருத்தி தொடர்பாக அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தினோம். அதில் குடிநீர் வழங்கும் திட்டம், மலசலகூடங்கள், பஸ்தரிப்பிடம், வீதிகள், வைத்தியசாலை போன்றவற்றைத் தூய்மைப்படுத்தும் திட்டம், அடிப்படைத் தேவைகள் தொடர்பான திட்டம் போன்றன குறிப்பிடத்தக்கன.

காங்கேசன்துறை, பருத்தித் துறை, மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம்.

✱ யுத்தத்தால் அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம்

✱ நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தினோம்

✱ அகதிகளை மீள் குடியேற்றினோம்

உயிரைப் பாதுகாத்துக் கொள்ள தென் இந்தியாவிற்குச் சென்ற தமிழ் அகதிகளைப் பார்வையிடச் சென்ற தெற்கின் முத லாவது அமைச்சர் டாக்டர் ஜயலத் என்பது குறிப்பிடத்தக்கது.

புனரமைப்பு, அபிவிருத்தி, மீள்குடியமர்த்துகை நடவடிக்கைகள் தொடர்பாக உடனடி மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கீழ் காணப்படும் அமைப்புக்களிடம் உதவியைப் பெற்றோம்.

01. அமெரிக்கா, யப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள்
02. இந்தியா
03. உலக வங்கி
04. ஆசிய அபிவிருத்தி வங்கி
05. ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தொடர்பான உயர்ஸ்தானிகர்
06. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

(வளரும்)

# அரசின் கபட நோக்கத்தை முறியடிக்கவே இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம்.

## சுயேட்சைக்குழு- 2 இன் கொள்கைப் பிரகடனம்

### யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழு- 2 விடுத்துள்ள கொள்கை விளக்கம் இது.

இலங்கைத் தீவின் பிரச்சினையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம்தான் எனக் கூறிவந்த சிங்கள தேசமா னது, அதனது சிநேக நாடுகளினது இராணுவ, Intelligence, அரசியல், நிதி மற்றும் உதவிகளுடன் ''புலிப் பயங்கரவாதி களை'' இராணுவ ரீதியாக அழித்து விட்டதாக உலகிற்குப் பிரகடனப்படுத்தி, பல நாள்கள் வெற்றி விழாவையும் கொண்டா டியுள்ளது. ஆனால், வடக்குக் கிழக்கில் வாழும் மக்கள் இன்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ்த்தான் ஆளப்பட்டு வருகின்றனர். கடந்த 12 ஆண்டுகளாக, அவர்கள் இரவு ஊடரங்குச் சட்டத்தின் கீழ்த்தான் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் யாழ்.குடாவை விட்டுச் சுதந்திரமாக வெளியேற முடியாதது மாத்திரமன்றி, யாழ்.குடாவினுள் பகல் வேளையில்கூடச் சுதந்திரமாக அசைய முடியாத நிலைதான் தொடர்கிறது.

''புலிப் பயங்கரவாதிகள்'' அழிக்கப்பட்டு விட்டதாக அரசு பிரகடனப்படுத்தியுள்ள போதும், பலவித அறிக்கைகளும் பல் வேறு அரசியல் கட்சிகள், இராணுவ அதிகாரிகளால் விடப்பட்டுவரும் போதும், யாழ்.குடா மக்கள் பேச்சு, எழுத்து, அசைவுச் சுதந்திரம் அற்றுத்தான் வாழ்கின்றனர். முன்னரைப்போலவே, ஆயுதங்கள் தாங்கிய படையினர் எங்கும் காணப்படுகின் றனர்.பத்தொன்பது வருடங்காளக வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், இன்றும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வாழமுடியாதுதான் உள்ளனர். யாழ்.குடாவில் கடற்றொழிலில் ஈடுபடுவோர், தொழில் புரிவதில் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் எதிர்நோக்கியே வருகின்றனர்.

இவை அனைத்துக்கும் மேலாக ''புலிப் பயங்கரவாதிக ள் அழிக்கப்பட்டு விட்டதாகக் கூறும் அரசு, தனது படையினரை 50,000 முதல் 100,000 பேரால் அதிகரிக்கும் திட்டத்தையும் முன்வைத்துள்ளது. வன்னி மக்களைத் தமது இடங்களில் மீளக் குடியேற அனுமதிக்காது,அவர்களை முகாம்களில் சிறை வைத்துள்ளது.

இவைகள் எதனை எடுத்துக்காட்ட முடியும்?

இவைகள் இலங்கையின் பிரச்சினையானது பெரும்பான்மைச் சமூகமும், சில தமிழ்க் கட்சிகளும் கூறுவந்ததுபோல் ''புலிப் பயங்கரவாதம்'' அல்ல, வேறொன்றே என்பதைத்தான் உறுதிப்படுத்துகின்றன!

அதுதான், வடக்குக் கிழக்கில் இன்று தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருபவைகளும், சுதந்திரம் வழங் கப்பட்ட காலம் முதல் இலங்கைத் தீவில் நடைபெற்று வந்தவைகளும். இலங்கைத் தீவு எதிர்நோக்கும் பிரச்சினையானது பெரும் பான்மை சமூகத்தவரது சிந்தனையில் இருந்து வருவதும், சங்கைக்குரிய எல்லாவல மேதானந்த தேரரால் எழுதப்பட்டு, ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டு 2005 ஜூலை 21ஆம் திகதி வெளியிடப்பட்டதுமான "The Sinhala Buddhist Heritahe in East and The North of Shri Lanka" என்ற நூலில் மீண்டும் பகிரங்கமாக முன்வைக்கப்பட்டதும்; சிறீ லங்கா இராணுவத் தளபதியால் உறுதிப்படுத்தப்பட்டதுமான ''ஆரியன்''- சிங்களம்- சிங்களவர்- தேரவாத பௌத்தம்- லங்கா என்ற ஒன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையிலான விஞ்ஞான ரீதியிலான ஆதாரங்கள் எதுவுமற்ற கற்பனைக் கோட்பாடும், அதன் அடிப்படையில் வகுக்கப்பட்டு வந்த கொள்கைகளும், நடைமுறைப்படுத்தல்களுமாகும்.

இந்தநிலையில், பெரும்பான்மை சமூகமானது அதனது விஞ்ஞான ரீதியிலான ஆதாரங்கள் எதுவுமற்ற கற்பனைக் கோட் பாட்டினை நிராகரிக்காதவரையும்:

✱ இலங்கைத் தீவானது சிங்கள தேரவாத பௌத்தர்களுக்கு மாத்திரமே சொந்தமானதாக இருந்துவரும்

✱ தேரவாத பௌத்தத்திற்கும், சிங்கள மொழிக்குமே, இலங்கைத் தீவில் முதலிடம் கொடுக்கப்படும்

✱ இலங்கைத் தீவின் சிங்கள தேரவாத பௌத்தர்களல்லாத ஏனைய பிரஜைகள், இரண்டாந்தரப் பிரஜைகளாகவே இருக்கவேண்டும்

✱இலங்கைத் தீவிற்குச் சொந்தமான சிங்கள தேரவாத பௌத்தர்கள் மனமிரங்கி வழங்கும்சலுகைகளைப் (Concessions) பெற்று, ஏனைய பிரஜைகள் மன நிறைவுடன் வாழவேண்டும்

✱ இலங்கைத் தீவில் சிங்கள தேரவாத பௌத்தர்களது ஒற்றையாட்சியே தொடரமுடியும். அதிகாரப் பகிர்வு, சமஷ்டி ஆட்சி என்பவைகளுக்கு இடம் இருக்க முடியாது

✱ இலங்கை பல் இன, பன்மத, பல் கலாசார, பன்மொழி நாடாக ஆக்கப்பட முடியாது

பெரும்பான்மைச் சமூகமானது அதனது கற்பனைக் கோட்பாட்டினை நிராகரிக்காத வரையும், இலங்கைத் தீவின் சிங்கள தேரவாத பௌத்தர்கள் அல்லாதவர்களைப் பொறுத்தமட்டில், ஜனநாயகம் என்பது போலியானதாகவே இருக்கும். மனித உரிமைகள் என்பதும் போலியானதாகவே இருக்கும்!

இன்று இலங்கைத் தீவில் ''புலிப் பயங்காரவாதம்'' அழிக்கப்பட்டு விட்டதாகவும் மக்கள் பயமின்றி வாழ வழிவகுக்கப் பட்டுவிட்டதாகவும் அரசு கூறினாலும், சிங்கள தேரவாத பௌத்தர்கள் அல்லாதவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளே. அவர்களுக்கு உரிமைகள் என்பது இருக்க முடியாது. சலுகைகள் மாத்திரமே கிடைக்கப்பெற முடியும். அச்சலுகைகளும் கூட, பெரும்பான்மைச் சமூகத்தால் விரும்பியபோது நீக்கப்படவும் முடியும். இது, இலங்கைத் தீவின் சிறுபான்மையினரை என்றும் பயத்துடன் (Fear) வாழ வேண்டியவர்கள் ஆக்குகின்றது.

இந்த நிலையில், ஜனநாயகத்தைக் பலப்படுத்த செயற்படுமாறும், ஒன்றிணையுமாறும் இன்று பல்வேறு தமிழ்க் கட்சிகளும், சிங்கள தேசக் கட்சிகளும் தமிழ், இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் மக்களுக்கு அறைகூவல் விடுவது, உண்மையில், பெரும் ஏமாற்றமாகவே இருக்கமுடியும்.

சிங்களதேசம் அதனது விஞ்ஞான ரீதியிலான ஆதாரங்கள் எதுவுமற்ற கற்பனைக் கோட்பாட்டி னைத் தமிழ்த் தேசத்திற்கும், உலகிற்கும் பகிரங்கமாக நிராகரிக்காத நிலையில், இலங்கையில் ''அரசியல் தீர்வு'' என முன்வைக்கப்படுவதும், அது பற்றித் தமிழ் அரசியல் கட்சிகள் ஆராய்ந்து, பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதும், அது பற்றித் தமிழ் மக்களுக்குப் பிரசாரம் செய்வதும், உண்மை யில் பெரும் ஏமாற்றமாகவே இருக்கமுடியும்.

இக்கட்டத்தில்தான், ''புலிப் பயங்கரவாதம்'' அழிக்கப்பட்டு விட்டதாகக் கூறும்சிறீ லங்கா அரசா னது யாழ்.குடாவில் நிலைமைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருமுன்னர் யாழ்ப்பாண மாநக சபைத் தேர்தலை ஏன் நடத்துகிறது என்ற மிக முக்கிய கேள்வி எழுகின்றது.

இங்குதான் ஒரு மிக முக்கிய விடயத்தினை யாழ்.மாநகர சபைப் பிராந்தியத்தில் வாழும் மக்க ளும், ஏனைய தமிழ் பேசும் மக்களும் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. ''புலிப் பயங்கர வாதிகள்'' அழிக்கப்பட்ட நிலையில் ஒன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையிலான ''ஆரியன்''- சிங்களம்- சிங்களவர்- தேரவாதபௌத்தம்- லங்கா என்ற கோட்பாட்டினை கொண்டுள்ள சிங்கள தேசக் கட்சியானது யாழ்ப்பாண மக்கள் வாக்களிக்கும் தேர்தல் ஒன்றில் வெற்றியீட்டினால்தான், தமிழ் மக்கள் சிங்கள தேசத்தின் ஒன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையிலான ''ஆரியன்''- சிங்களம்- சிங்களவர்- தேரவாதபௌத்தம்- லங்கா என்ற கோட்பாட்டினை எதிர்க்கவில்லை. அதனை மனமார ஏற்கின்றனர் என உலகிற்குக் காட்டமுடியும். தமிழ் மக்கள் தமக்கு உரிமைகளைக் கேட்கவில்லை. சலுகைகளை மாத்திரமே கேட்கின்றனர் என உலகிற்கு உணர்த்தமுடியும்!

இந்தநிலையில், யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் பங்கு கொண் டும், சிங்கள தேசக் கட்சியை, அல்லது அதற்குப் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் ஆதரிக் கும் தமிழ்க் கட்சிகளை வெற்றிபெற வைத்தும், மாநகர சபையை நிர்வாகம் செய்வது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க எந்த விதத்திலும்உதவப் போவதில்லை. மாறாக, அது உண்மையில் சிங்கள தேசத்தின் கற்பனைக் கோட்பாட்டினை ஏற்கும் ஒரு நடவடிக்கையாகவே உண்மையில் இருக்கும். ''ஒரு நாடு, ஓர் இனம்'' என்ற கொள்கையைத் தமிழ் மக்கள் ஏற்பதாகவே இருக்கும்.சிங்கள தேசம் அதனது ''ஆரியன்''- சிங் களம்- சிங்களவர்- தேரவாத பௌத்தம்- லங்கா கோட்பாட்டினை அறிவியல் அடிப்படையில்தான் உண்மையில் நிராகரிக்க முடியும். இந்திய அரசு அல்லது பிற அரசுகள் விரும்பினால், அல்லது அழுத்தத்தினால் அது அதனது கற்பனைக் கோட்பாட்டினை முழுமையாக நிராகரிக்கும் நிலை உருவாகமுடியாது. இங்குதான் தமிழ், சிங்களம்,பாளி, சமஸ்கிருத மொழிகள் அவற்றின் இலக்கியங்கள், நூல்கள், தொல்பொருள்கள் என்பவைகள் விஞ்ஞான ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு, முன்னைய பிழையான ஆய்வு முடிவுகள் நிராகரிக்கப்பட்டு, சரியான முடிவுகளுக்கு வருவதும், அவற்றை முழுமையாக ஏற்பதும் முதல்முக்கியமாகின்றது. ஒட்டுமொத்தத்தில், யாழ்.மாநகர சபைத் தேர்தலை இலங்கைத் தீவில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தப் பயன்படுத்துவதாயின், தேர்தலைப் பகிஷ்கரிப்பது சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு சாதகமான நிலையைத்தான் உருவாக்கும்.

**ஏன் இந்த அவசர தேர்தல்**

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் 30,000க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப் பட்டும் இலட்சக்கணக்கான மக்கள் உறவுகளையும், உடமைகளையும் இழந்து, முட்கம்பி வேலிக்குள் சிறைவாசம் அனுப வித்து வரும் நிலையிலும், யாழ்.குடாவில் மக்கள் இயல்பாக வாழ அனுமதிக்கப்படாத நிலையிலும், யாழ்ப்பாண மாநகர சபைக்கான தேர்தல் சிறீலங்கா அரசினால் அவசர அவசரமாக நடத்தப்படுகிறது. அதற்கான காரணம், அல்லது காரணங்கள் எவை என்பதைச் சரியாக ஆராந்தறிந்து செயற்படுவதே தமிழ் மக்கள் இன்று செய்யவேண்டிய மிகமுக்கிய காரியமாகும்.

சிறீலங்கா அரசானது இன்று இரண்டு மிக முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது. அவையாவன:

✱ 'தமிழீழம்' என்ற தனி நாட்டை அமைக்கவென ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட நிலையில், அரசால் தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வு முன்வைக்கப்படவேண்டும் என்ற உலக கருத்தும், அழுத்தமும்

✱ வன்னிப் போரில் சர்வதேச போர்ச் சட்டத்தற்கு முரணாகப் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினால் கொல்லப்பட்டுள்ளனர் என்ற ஐக்கிய நாடுகளின் குற்றச்சாட்டும், சிறீலங்கா அரசு சர்வதேச நீதி மன்றத் துக்கு முன் விசாரணைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்ற உலகக் கருத்தும்

இந்த இரண்டு பெரும் பிரச்சினைகளையும் 'ஒரு எறியில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவது' போல், யாழ்ப்பாணத் தமிழ் மக்களூடாகத் தீர்த்துக் கொள்ளும் நோக்கத்திலேயே, அரசு யாழ்.மாநகர சபைத் தேர்தலை அவசர அவசரமாக நடத்துகின்றது.

இத்தேர்தலை நடத்தி, ஆட்சி பீடத்தில் உள்ள கட்சியோ, அல்லது அதன் ஆதரவுத் தமிழ்க் கட்சிகளோ, அல்லது கைப் பொம்மைத் தமிழ்க் கட்சிகளோ வெற்றி பெற்று, யாழ்.மாநகர சபையை நிர்வாகம் செய்ய வைப்பதன்மூலம், தமிழ் மக்கள் ஜனநாயகத்தை இன்று அனுபவிக்கின்றனர் என்றும், அவர்கள் சிங்களப் பெரும்பான்மையினரது கொள்கைகளை ஏற்கின்றனர் என்றும், வன்னிப் போரில் அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாகத் தமிழ் மக்கள் கருதவில்லை என்றும் உலகுக்கு ஆதாரபூர்வமாகக்காட்டி, அரசும், அதனது சிநேக சக்திகளும் அரசினது பிரச்சினைகளைச் சுலபமாகத் தீர்க்கும் தந்திரோபாயமானது இன்று மாநகர சபைத் தேர்தலூடாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் இரத்தினம்



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி த.இரத்தினம் 16.07.2009 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் இராசேந்திரம், நிரஞ்சனா (வவா), நிர்மலா (சின்னன்), மஞ்சுளா (மஞ்சு), யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ப்ற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்துப்பனையடி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல்:
ச.சித்திவிநாயகம் (மருமகன்),
தபாலகம், அளவெட்டி.

(87151)

## திருமதி புத்திசிகாமணி இராஜகுமாரி



கன்பொல்லை வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புத்திசிகாமணி இராஜகுமாரி 16.07.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆழ்வான்- நாகி தம்பதியரின் அன்பு மகளும், புத்திசிகாமணியின் (ஓய்வூதியர்) அன்பு மனைவியும் ராதாரமணி, ஜெயரமணி, ஸ்ரீரமணி, தேவசிகாமணி, பரமசிகாமணி (சமாதான நீதிவான் - அதிபர், ரயில் நிலையம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும நாகேந்திரம் (சாரதி, வல்வெட்டித்துறை நகரசபை), யசிந்தா, காலஞ்சென்ற விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், திவாகர், துவாரகா, தமயந்தி, துஸ்யந்தி, கானுஜன், கயூரன், தர்மீகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10 மணியளவில் வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
கு.நாகேந்திரம்
(மருமகன்).

(87099)

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், இல.133, நாவலர் வீதி, முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள நில.பர.01 குளி 2.09 விஸ்தீரணம் கொண்ட காணியும் கட்டடமும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு:- தொ.பே: 0774016706

## காணி விற்பனைக்கு

நல்லுணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் 7 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (சைவப்பிரகாச வித்தியாசாலை அருகில்)

தொடர்பு: ந.இராஜேஸ்வரி,
பிள்ளையார் வீதி, வடலியடைப்பு

## வேப்பமரங்கள் விற்பனைக்கு

6 அடி, 7 அடி சுற்றளவு உள்ள வேப்பமரங்கள் விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு: 63, இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2009
## விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்
## சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்

**இடம்:**
வாழ்வக இல்லம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

**காலம்:**
நாளை (19.07.2009) ஞாயிறு
காலை 9 மணி.

**தலைவர்:**
திரு ஆ.ரவீந்திரன்,
தலைவர், வாழ்வகம்.

அனைத்து அங்கத்தவர்களையும் கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செ.யோகானந்தராஜா
செயலாளர், வாழ்வகம்.

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வி மைதிலி
கந்தசாமி

மலர்வு
19 * 11 * 1961

உதிர்வு
30 * 07 * 1997

திதி: 18.07.2009
(ஏகாதசி)

ஆண்டுகள் பன்னிரண்டு சென்றும்
ஆறவில்லையம்மா உன் துயரம்
மீண்டும் நீ வாராயோ - என
நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதர, சகோதரிகள்.

(87042)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.


Diploma in Graphic Designing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

Diploma in Hardware Engineering
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

Diploma in Video Editing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir
ஆசிரியவசதியினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்:- 20/07/2009 9 AM

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னம்மா பாலசிங்கம்

குரும்பைகட்டி, புலோலி வடமேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா பாலசிங்கம் 16.07.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் கந்தையா - மீனாட்சி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாசிலாமணி தம்பதியரின் அன்பு மருமகளும் சீதாதேவி, சிவ்மணி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் அருட்பிரகாசம், கனகம்மா, காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், இராசரத்தினம், மனோன்மணி, சுந்தரலிங்கம், ஜெயவீரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் லோகநாதன் (காணிப்பதிவகம் அலுவலக உத்தியோகத்தர்), சிவநாதன் (டென்மார்க்), நாகநாதன், மங்களவதனி, மதிவதனி, சக்திநாதன் (சுவிஸ்), சிதம்பரநாதன் (லண்டன்), கண நாதன் (மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்), யோகவதனி (லண்டன்), அருள்நாதன், ஜெயவதனி ஆகியோரின் பாசமிகு தாயும் வாணி, பிறேமவதனா (டென்மார்க்), சாந்தமணி, அமிர்தலிங்கம், சிவநாயகம், சிவரூபினி (சுவிஸ்), தீபசாந்தினி (உதவித் தபாலதிபர்), கிருபாகரன் (லண்டன்), மீரா, காந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் ரேதிகா, துவாரகா, கார்த்திகா (டென்மார்க்), ஆதவன், ஆதிரன், இலக்கியா (டென்மார்க்), றாபிகா, சர்மி (சுவிஸ்), ஜெயகஜன், ஒவ்யா - அஷ்வின் (டென்மார்க்), கஜனிகா, விஷ்ணுகா, நிதுஷ் (சுவிஸ்), தர்ஷனா - தக்ஷனா (லண்டன்), மதுராஜி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பைகட்டி,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/559619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான விருது 2008



பத்திரிகை வெளியிடுதல், அதில் பணிபுரிதல் கீர்த்தி மிக்கவையாக இலங்கையிலும் கருதப்பட்ட காலம் ஒன்று இருக்கவே செய்தது. நாட்டின் நலனில், மக்களின் நலனில் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படவேண்டிய அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் மக்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் விடும் தவறுகளையும் ஒவ்வாதவைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து அவர்களைத் திருந்தத் தூண்டும் வகையில் பத்திரிகைப் பணி அமைவதே இயல்பும், இலக்கணமும் ஆகும்.

உண்மையான ஜனநாயகப் பற்றுள்ள நாடுகளில் பத்திரிகையாளர் அதனைச் சரிவரச் செய்யவேண்டும் என்றே மக்கள் விரும்புகிறார்கள். பல மேலைநாடுகளில் பத்திரிகையாளர்களிடம் இருந்து வாசகர்கள் - மக்கள் அதனையே எதிர்பார்க்கிறார்கள். ஜனநாயகத்தின் நான்கு தூண்களின் ஒன்றான பத்திரிகைத் துறையின் பலம் மக்கள் சார்பில், அவர்கள் பக்கம் நின்று எழுதுவதே ஆகும்.

ஆனால் இலங்கையில், அவ்வாறு பத்திரிகைப் பணி ஆற்றுவது கஷ்டமாகி வருகிறது. பல அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், வன்செயல்களை எதிர்கொள்ளவேண்டிய இக்கட்டுகள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாகத் தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கும் 'உதயன்', பல தரப்புக்களாலும் தத்தமது சார்புநிலையில் வெளியாகவேண்டும் என்று நோக்கப்படுகின்றான். அதனால் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அவன் எத்தனையோ தியாகங்களைச் செய்ய வேண்டி நேர்ந்துள்ளது.

அதனைக் கருத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள இந்த விருது, உதயனுடன் அதன் உயர்ச்சியிலும் தாழ்விலும் கூடவே துணை நிற்கும் வாசகர்களுக்குக் கிடைத்த பெருமையும் பரிசும் ஆகும்.

## உதயன் பெற்ற விருது பெறுமதியானது



பத்திரிகைச் சுதந்திரம் சனநாயகத்தின் மிகமுக்கியமான குறிகாட்டியாகும்.

பத்திரிகைச் சுதந்திரத்தினைப் பாதுகாப்பதன் வழி சமூக நீதியும் சமூக மேம்பாடும் நிலை நிறுத்தப்படுகின்றன.

இந்தவகையில் சூழமைவின் இடர்களிடையேயும் பத்திரிகைச் சுதந்திரத்தினைக் காத்தமைக்காக 'உதயன்' பெற்ற விருது பெறுமதியானது. அழகான நீதியான நாளையைப் படைக்கும் காலக் கடமையில் 'உதயன்' பணி மென்மேலும் உறுதியாய்த் தொடர்ந்திட என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நா.சண்முகலிங்கன், துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மக்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி



இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து உதயனுக்கு இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விஷேட விருது வழங்கப்பட்ட செய்தி மக்களுக்கு மகிழ்ச்சி தருவதாகும். பத்திரிகை பலருக்கு பல வழிகளில் உதவுகின்றது. செய்திகளை அறிவிப்பது மட்டுமன்றி பலருடைய அரிய கருத்துக்களை சமூகம் அறியவும், புதிய புதிய சமகாலச் சிந்தனைகளை இளையோர், முதியோர் என்ற பாகுபாடு இல்லாமல் உலகிடை சென்றடையவும் 'உதயன்' வழிவகுக்கின்றது. ஈழகேசரி பத்திரிகை தொடர்ந்து வெளிவராதது நமது துர்ப்பாக்கியம்.

'உதயன்' பத்திரிகையும் நிர்வாகத்தினரும் அதன் வளர்ச்சியில் ஆர்வமாக இருப்பது கண்டு மகிழ்ச்சி.

எல்லாம் வல்ல தூய அன்னையின் திருவருள் என்றும் இவர்களுக்கு துணை நிற்பதாகுக

இறைபணியில் அன்னையின் அடியவன்
சித்ரூபானந்தா

## தமிழர்களின் உரிமைக் குரலாக ஒலிப்பவன்



தமிழ்த் தேசியத்துக்கான, தமிழ்த்தாயின் உரிமைக்கான குரலாக அடையாளப் படுத்தப்படுவது உதயன் பத்திரிகை தான். எத்தனையோ இடர்கள், எத்தனையோ சோதனைகள், எத்தனையோ நெருக்கீடுகள் வந்த போதும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை நடுநிலை யோடு வெளியிடுவதில் உதயனுக்கு நிகர் உதயனேதான். மற்றைய ஊடகங்கள் சொல்லத்தயங்கு கின்ற விடயங்களைக் கூட துணிச்சலுடன் வெளிக் கொணர்ந்த உதயனுக்கு இலங்கையின் பத்திரிகைச் சுதந்திரத் திற்கான விருது கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ் வடைகின்றேன். இன்று மட்டுமல்ல என்றைக்கும் தமிழ் மக்களின் நலனை உதயன் வெளிக்கொணர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சட்டத்தரணி மு.றெமிடியஸ்
யாழ்.மாநகரசபை முதன்மை வேட்பாளர்,
இலங்கைத் தமிழரசுக் கட்சி.

## மக்கள் தேவையுணர்ந்து பணியாற்றும் 'உதயன்' சேவை தொடரட்டும்.



'உதயன்' தனது 24 வருட சேவையினால் எமது நாட்டில் மட்டுமல்ல பாரெங்கும் பரவியுள்ள தமிழ் மக்களின் மனங்களை விட்டு நீங்கா இடம் பிடித்துள்ளான். இதே வேளை இவ்வளவு காலத்துக்குள் உதயனுக்கு ஏற்பட்ட தடைகள் கொஞ்சமல்ல. உயிர் இழப்பு, உடைமை இழப்பு, அச்சுறுத்தல் எனப் பல்வேறு தடைகளைத் தாண்டியும் தனது செய்திப் பணியை திறம்பட ஆற்றி வருகின்றான். இத்தகைய தடைகளை எல்லாம் தகர்த்து தலை நிமிர்ந்து நிற்கும் 'உதயன்' பத்திரிகைக்கு இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விருது வழங்கப்பட்டுள்ளதை எண்ணி நாம் மகிழ்வடைகிறோம்.

இந்த விருது உண்மையில் 'உதயன்' பத்திரிகைக்கு மிகவும் சாலப் பொருத்தமானதொன்றாகும். தனது துணிச்சல் மிகு கருத்துக்களாலும், காலத்தின் தேவை உணரப்பட்ட செய்திகளாலும் தமிழ் மக்கள் மனம் கவர்ந்த நாளிதழ் உதயனுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடும், நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட 'உதயன்' தொடர்ந்து பாடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்வதோடு 'உதயன்' வீறுநடையோடு தொடர் உதயமாக பிரகாசிக்க வாழ்த்துகளுடனும், இறையருளையும் வேண்டி நிற்கின்றோம்.

சரவணபவன், தலைவர்,
மானி/ ப.தெ.வ.அ.கூ சங்கம்

## உதயனின் பணிகள் சளைக்காது தொடரட்டும்



இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விசேட விருது 'உதயன்' நிறுவனத்திற்கு கிடைத்திருக்கிறது. இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் இணைந்து இதழியல் துறையில் அதி உயர் கௌரவ விருது என மதிக்கப்படும் விருதை இம்முறை உதயன் நிறுவனத்திற்கு வழங்கியமை மிகப்பொருத்தமானதும் பாராட்டப்படவேண்டியதும் ஆகும்.

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் உதயன் தனது செயற்பாடுகளை அச்சமின்றியும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து செய்து வருவது பாராட்டுக்குரியது. எம் மண்ணிற்கும் எம் மக்களுக்கும் உதயன் பத்திரிகை சேவையாற்றி மேலும் பல விருதுகளைப் பெற எல்லாம் வல்ல வல்வை ஸ்ரீ முத்துமாரித்தாயை இறைஞ்சி வேண்டிப் பிரார்த்தித்து உதயன் நிறுவனத்திற்கும் அதனைச் சார்ந்தவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் நல்லாசிகளையும் கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.
சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக
சைவக்குருமார் சம்மேளனம், பிரதமகுரு, ஸ்ரீ
முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,வல்வெட்டித்துறை.

## சமூக சிந்தனை நோக்கிய சளைக்காத சேவைக்குக் கிடைத்த விருது



'உதயன்' பத்திரிகைக்கு பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விருது கிடைத்தமையை இட்டு பெரும் மகிழ்வடைகின்றோம். உதயனின் வாழ்வும் பயணமும் கரடுமுரடானவை. நெருக்கடிமிக்கவை. ஆபத்து நிறைந்தவை. எல்லாவற்றையும் தாண்டி சமூக சிந்தனை நோக்கிய சேவையைப் புரிய என்றுமே சளைக்காது போராடிவருவது உயர்வாகவே உள்ளது. அவ்வகை உயர்வுக்காக கிடைத்த விருதாகவே நாம் அதனைக் கருதுகின்றோம்.

சவால்கள் மத்தியில் 'உதயன்' தனது பணியினை தொடர்ந்து ஆற்றவேண்டும். உண்மைக்கு வலிமை சேர்க்கவேண்டும். பொய்களை புறந்தள்ளி உண்மையின் உயிர்வாழ்வுக்காக 'உதயன்' உயிர்வாழ வேண்டும். சமூகம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு உரிய நேரத்தில் உரிய பதில் நடவடிக்கையை முன்னெடுக்க 'உதயன்' முயல்வது அதன் விருதுக்கு அவன் ஆற்றும் சேவையாகும்.

நம்பிக்கையூட்டும் ஒத்துழைப்புக்களையும் நேசிப்பான பங்களிப்பையும் புரிந்துகொள்ளும் திறனுடைய 'உதயன்' விருதை வெல்வதற்கான இழப்புக்களை நினைவுகூர்ந்து கொண்டு மீண்டுமொருகணம் வாழ்த்துவதில் பெருமை கொள்கிறோம். உதயனின் ஆசிரியர், முகாமையாளர், பணியாளர் அவன்சார்ந்த சேவையாளர் எல்லோருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் சேவை தொடர நாம் மட்டுமல்ல அனைத்து ஊடக சுதந்திர நேசிப்பாளர்களும் உதவவேண்டுமென கோருகின்றோம்.

கே.ரீ.கணேசலிங்கம் தலைவர், சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

## மறக்கமுடியாத கௌரவம் இது



2008 ஆம் ஆண்டுக்குரிய அதி உன்னத கௌரவ விருதினை எம்மண்ணில் இருந்து வெளியாகும் 'உதயன்' நாளிதழ் பெற்றுக்கொண்டது. தமிழ் மக்கள் மனம் பூரிக்கும். மறக்கமுடியாத கௌரவம். ஆரம்ப இதழ் தொடக்கம் இன்றுவரை உதயனைப் படிக்கும் நான் ஆசிரிய பீடத்தினர் அனைவரையும் பாராட்டுகின்றேன். துணிவான பணி தொடரட்டும். அடுத்த கௌரவமும் உதயனுக்கே. உதயன் என்றும் உதயமாகட்டும் சூரியன் போல்.

24 ஆண்டுகள் உதயனைப் படித்து வருபவனின் பாராட்டு இது.

சி.இராஜநாயகம், கல்வி அதிகாரி, ஓய்வில்.

## தொடர்ந்தும் தனது பணியில் முழு மூச்சாக உழைக்கட்டும்

'உதயன்' கடந்த 24 வருடங்களாக பத்திரிகைத்துறையில் தடம்பதித்து மக்களுக்கான தன்னாலான பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறான். 'உதயன்' வெளியாக ஆரம்பித்த காலத்திலிருந்து நான் 'உதயன்' முகவராக தொழிற்பட்டு வருகிறேன்.

அந்த அனுபவத்தின் ஊடாகச் சொல்கின்றேன். உதயனுக்கு நிகர் 'உதயன்'தான் அதுதான் மக்களின் மனம் கவர்ந்த நாளிதழ் என்பதிலும் ஐயமில்லை. எத்தனையோ தடைகளைத் தாண்டி தமிழ் இனத்தின் கருத்துக்களை உலகெங்கும் ஒலிக்கச்செய்து வருகிறான்.

இத்தகைய பணியில் தன்னை இணைத்துள்ள உதயனுக்கு இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான விருது கிடைக்கப்பெற்றது எல்லையற்ற ஆனந்தத்தை எமக்களிக்கிறது. 'உதயன்' தொடர்ந்தும் தனது பணியில் முழுமூச்சாகச் செயற்பட என்றும் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இ.புஸ்பநாதன், உதயன் முகவர் S.R.P. ஸ்ரோர்ஸ்,
சங்கானை.

## மக்கள் சேவைக்குக் கிடைத்த வெகுமதி



இலங்கையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் பத்திரிகைச் சுதந்திரத்தினைப் பாதுகாத்தமைக்கான உயர் விருது இந்த ஆண்டு 'உதயன' பத்திரிகைக்கு கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்டகாலமாக மக்களின் நன்மதிப்பினைப் பெற்று பத்திரிகாதர்மத்தினைப் பேணிப் பாதுகாத்து உதயன் தனது செயற்பாடுகளை முன்னெடுத்தமை பாராட்டுக்குரியதாகும்.

மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் மக்களின் வாழ்வில் வளம் கொழிக்கவேண்டும் என்ற உயரிய நோக்கிலும் இப் பத்திரிகை ஆற்றிவரும் அளப்பரிய அர்ப்பணிப்புமிக்க பணிகளுக்குக் கிடைத்த வெகுமதியே இவ்விருது எனக்குறிப்பிடுவது பொருத்தமானது.

உதயனின் பணிகள் இடையூறு ஏதும் இன்றி சிறப்பாக முன்னெடுத்து செல்லப்படுவதற்கும் மக்களுக்குச் சிறந்த சேவைகளை தொடர்ந்து வழங்கவும் எல்லாம் வல்ல இறைவனின் அருளாசியினை வேண்டுவதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சி.சத்தியசீலன், பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், கரவெட்டி.

## நல்லவற்றையே துணிச்சலுடன் செய்பவன்



இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவன மும் இணைந்து வழங்கிய இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக் கான விசேட உயர் விருது இவ்வாண்டு உதயனுக்குக் கிடைத்தமை பெரும் பாராட்டுதல்களுக்குரிய ஒன்றாகும்.

இதே உதயனுக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் துணிச்சலான பத்திரிகைக்கான விருது கிடைத்தது. அப்போது நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் அன்னை சலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 'நல்லதைச் செய்வதற்குத்தான் அதிக துணிச்சல் வேண்டும்' என்று கூறியது நேற்றுப்போல் இருக்கிறது. கடந்த 24 வருட வாழ்வில் உதயன் நல்லனவற்றையே துணிச்சலுடன் என்றும் செய்து வந்துள்ளான்; வருகின்றான்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையாக இருந்தாலென்ன, செம்மணி மனிதப் புதைக்குழி விவகாரமாக இருந்தலென்ன, தமிழ்த்தேசியத்திற்கு இன்னல்கள் நேர்ந்தாலென்ன, பஞ்சப்பட்ட மக்கள் அரிசி மாவிற்காகப் பரிதவித்தாலென்ன, பத்திரிகையாளர்களுக்கெதிராக வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டாலென்ன, பத்திரிகைகளின் சுதந்திரத்தை நசுக்க எவரும் முற்பட்டாலென்ன அவற்றுக்கெல்லாம் எதிராக 'உதயன்' என்றுமே குரல் கொடுக்கத் தவறியதில்லை என்பது வரலாறு.

இந்த வகையில் நெருப்பாற்றைக் கடந்த சாதனைகள் பல உதயனுக்குண்டு. 'உதயன்' பிராந்தியப் பத்திரிகை என்ற நிலையைக் கடந்து அது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பத்திரிகை என்பதற்கான சான்றுகளே இவ் விருதுகள் எல்லாம்.

உண்மையில் அநீதிகளை எதிர்க்கவும் ஓர் அசாதாரண துணிச்சல்வேண்டும். அதைத்தான் உதயனும் இன்று செய்து வருகின்றது. உதயனுக்கு எனது பாராட்டுதல்கள். அதன் புகழ்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் நானும் கலந்துகொள்கின்றேன்.

செல்லப்பா நடராசா,
மூத்த பத்திரிகையாளர்.

## எதிர்காலத்திலும் மக்களுக்கு வழிகாட்டியாக விளங்குக!



உதயன் பத்திரிகைக்கு, பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான 2008 ஆம் ஆண்டு விருது கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். மிகவும் கடினமான யுத்தகாலத்தில் பொருள்கள் காகி தாதிகள் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு இருந்த காலத்திலும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து, எதிர்நீச்சல் அடித்து 'உதயன்' தனித்து நின்று மக்களுக்கு சேவையாற்றியதை என்றும் மறக்க முடியாது. உதயனின் சேவை நேர்மையுடன் மக்களின் சுபீட்சத்திற்கு வழிகாட்டியாக எதிர் காலத்திலும் விளங்கவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

சி.வீரகத்திப்பிள்ளை,
சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.

## உதயன் சந்தித்த நெருக்கடிகள், இழப்புக்கள், அழுத்தங்கள் சில.... (நேற்றைய தொடர்ச்சி)

**★ 2006 ஒகஸ்ட் 15 இல்....**

உதயன் பத்திரிகையை வாகனத்தில் வடமராட்சிப் பகுதிக்கு எடுத்துச்சென்று விநியோகித்துவிட்டு (பணத்துடன்) அலுவலகம் திரும்பும் வழியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தவேளையில் பட்டப்பகலில் வாகனம் மறிக்கப்பட்டு வாகனத்துக்குள் வைத்தே பணியாளர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**★ 2006 ஒகஸ்ட் 18 இல்...**

கோப்பாயில் இராசவீதியில் அமைந்திருந்த உதயனின் பிரதான களஞ்சியம் இனங்காணப்படாத ஆயுததாரிகளால் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் தாக்கப்பட்டு துரத்தப்பட்ட பின்னர் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டது. அங்கிருந்த ஆயிரக்கணக்கான தொன் பத்திரிகை அச்சிடும் தாள் தீயில் எரிந்து முற்றாகப் பொசுங்கியது. பல லட்சம் பெறுமதியான [illegible] எரிந்து [illegible]

**★ 2008 ஜனவரி 06 இல்....**

அடுத்தநாள் (7 ஆம் திகதி) உதயன் பத்திரிகை வெளிவரக்கூடாது. வெளிவந்தால் நடப்பது வேறு என்றுகூறி அநாமதேயத் தொலைபேசி அழைப்பு மூலம் மிரட்டப்பட்டது.

**★2008 ஒக்ரோபர் 24 இல்...**

அன்றைய பத்திரிகை குடாநாட்டின் பல இடங்களுக்கு விநியோகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது, ஆயுதம் தரித்த இளைஞர்களால் திருப்பி அனுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்குச் சம உரிமை வழங்க வேண்டும் இலங்கைத் தூதரிடம் பா.ஜ.க. வலியுறுத்து

டில்லி, ஜுலை 18

இலங்கைத் தமிழர்களுக்குச் சம உரிமை வழங்குமாறு இலங்கைத் தூதர் ஜெயசிங்கவை நேரில் வரவழைத்து பா.ஜ.கவின் சார்பாக வலியுறுத்தப்பட்டது.

மேலும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை மேலும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் இலங்கைத் தூதரிடம் வலியுறுத்தப்பட்டது.

இந்தியா பவுண்டேசன் என்ற அமைப்பு சார்பில், இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த ஆலோசனைக் கூட்டம், டில்லியில் பா.ஜ.கவின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு இல்லத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பா.ஜ.க. எம்.பிக்கள் 25 பேரும், ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர்களும் கலந்து கொண்டனர். இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் ஜெயசிங்கவும் இக்கூட்டத்துக்கு வரவழைக்கப்பட்டார்.

இக்கூட்டத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு உணவு, உடை வழங்குவதுடன், அவர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்று பா.ஜ.க. சார்பாக வலியுறுத்தப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை மேலும் காலதாமதம் செய்யாமல் மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அனைத்துத் தகவல்களையும் கேட்டறிந்த இலங்கைத் தூதர் ஜெயசிங்க, பாதிப்புக்குள்ளான தமிழர்களுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார்.

பா.ஜ.கவின் கோரிக்கைப்படி, அகதி முகாம்களில் உள்ள தமிழர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும் எனவும், 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் கொண்டு வருவது குறித்தும், தமிழர்களுக்குச் சம உரிமை வழங்குவது குறித்தும், தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் என்றும் இலங்கைத் தூதர் உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



மாயாவதியை அவதூறாகப் பேசினார் எனக் கூறி உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் தலைவர் ரீட்டா பகுகுணாவை பொலிஸார் கைதுசெய்து ஜீப்பில் கொண்டுசெல்வதை முதல்படத்திலும், இந்தக் கைதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்த காங்கிரஸ் தொண்டர்கள் பொலிஸாருடன் இடிபடுவதையும் அடுத்த படத்திலும் காணலாம்.

# மாயாவை அவதூறாகப் பேசினார் என காங்கிரஸ் தலைவர் ரீட்டா திடீர் கைது!

## உத்தரப் பிரதேச அரசியலில் பரபரப்பு



மொராதாபாத், ஜூலை 18

மாயாவதியை அவதூறாகப் பேசினார் எனக் கூறி உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் தலைவர் ரீட்டா பகுகுணா ஜோஷி கடந்த புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தில் வியாழக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட அவரை 14 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதனையடுத்து அவர் மொராதாபாத் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார்.

ரீட்டா பகுகுணாவின் சர்ச்சைக்குரிய பேச்சால் ஆத்திரமடைந்த மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சித் தொண்டர்கள் லக்னெவில் உள்ள அவரது வீட்டைச் சூறையாடினர். வீட்டின் ஒரு பகுதிக்கு தீ வைக்கப்பட்டது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் தீக்கிரையாகின.

முன்னதாக நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற ரீட்டா பகுகுணா உத்தரப் பிரதேசத்தில் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படும் அவல நிலை தொடர்கிறது எனப் பேசினார். அப்போது மாநில முதல்வர் மாயாவதியைத் தொடர்புபடுத்தி அவரைத் தரக்குறைவாகப் பேசினார் எனக் கூறப்படுகிறது.



இதனையடுத்து கடந்த புதன்கிழமை இரவு காசியாபாத் மாவட்டத்தில் இருந்து டில்லிக்கு செல்லும் வழியில் உத்தரப் பிரதேச பொலிஸாரால் பகுகுணா கைது செய்யப்பட்டார்.

அவர் மீது 153 ஏ- பிரிவு (வன்முறையைத் தூண்டும் வகையில் பேசுவது), இந்திய தண்டனைச் சட்டம் 109ஆவது பிரிவு (தாழ்த்தப்பட்டவரை ஜாதிப் பெயரைக் கூறித் திட்டுவதை எதிர்க்கும் வன்கொடுமை தடுப்புச் சட்டம்) ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பிரிவுகளில் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் வெளிவர முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 115 முகாம்களில் 73 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகள்

## அன்பழகன் தகவல்



சென்னை, ஜூலை 18

1983 இலிருந்து இந்த வருடம் மார்ச் மாதம் வரை தமிழகத்துக்கு 73 ஆயிரத்து 451 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்துள்ளனர்.

இவர்கள் 26 மாவட்டங்களில் 2 சிறப்பு முகாம்கள் உட்பட 115 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் - என்று தமிழக நிதி அமைச்சர் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் நேற்றுமுன்தினம் அவர் தாக்கல் செய்த பொதுத்துறை மானியக் கோரிக்கையிலேயே இதைத் தெரிவித்தார். அதன் விவரம் வருமாறு -

2008 - 2009களில் மத்திய அமைச்சர்கள் ஆயிரத்து 685 முறை தமிழகம் வந்துள்ளனர். மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள், 566 தடவைகள் வந்துள்ளனர்.

1983 இல் இருந்து இந்த வருடம் மார்ச் மாதம் வரை இலங்கைத் தமிழர்கள் 4 கட்டங்களாக 73 ஆயிரத்து 451 பேர் தமிழகம் வந்துள்ளனர். இவர்கள் 26 மாவட்டங்களில் 2 சிறப்பு முகாம்கள் உட்பட 115 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 2008 - 2009களில் பல நிவாரண உதவிகள் வழங்க 44 கோடி 34 லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

# தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்காதவரை பாகிஸ்தானுடன் பேச்சை ஆரம்பிக்க முடியாது

## மன்மோகன் அறிவிப்பு

கெய்ரோ, ஜுலை 18

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்காதவரை பாகிஸ்தானுடன் பேச்சு என்ற கேள்விக்கே இடமில்லை - என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் திட்டவட்டமாக அறிவித்தார்.

எகிப்தில் நடந்த அணிசேரா நாடுகள் மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் கிலானியை சந்தித்துப் பேசிய பின்னர்செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அப்போது அவர் கூறியவை வருமாறு -

மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தான் தீவிரவாதிகளை சட்டத்தின் முன்பு கொண்டுவந்து நிறுத்தாதவரை பாகிஸ்தான் அரசுடன் பேச்சு தொடங்கப்பட மாட்டாது.

மேலும், இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் மண்ணை தீவிரவாதிகள் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தாதவரை பேச்சு என்ற கேள்விக்கே இடமில்லை. தீவிரவாதத் தாக்குதலைத் தடுக்க பாகிஸ்தான் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளாவிட்டால் எந்தப் பேச்சும் பலனைத் தராது. அதுவும் மும்பை போன்ற தாக்குதல் மீண்டும் நடக்குமேயானால் பேச்சை நடத்துவது மிகவும் சிரமம். அப்படியே பேச்சு தொடங்கப்பட்டாலும் கூட அதை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

பலுசிஸ்தான் மாகாணத்திலும், மற்ற பகுதிகளிலும் தங்களுக்கு தீவிரவாத அச்சுறுத்தல்கள் இருக்கிறது எனப் பாகிஸ்தான் அரசு கூறி வருகிறது.

இதுபற்றி இந்தியா பயப்படுவதற்கு எதுவும் இல்லை. நமது கொள்கைகள் அங்கே திறந்த புத்தகம் போன்றவை. முடிவு எடுக்கப்படவில்லைஎந்தப் பிரச்சினை பற்றியும் நாம் விவாதிப்பதற்கு ஆர்வமாக இருக்கிறோம். பாகிஸ்தானுடன் பேச்சு நடத்துவதைத் தவிர வேறு எந்த வாய்ப்பும் இல்லை. இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்த மாதிரியான பேச்சு நடத்தப்படும் என்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இதை கூடியவரை அவ்வப்போது சந்தித்துக் கொள்ளும் இரு நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் மூலமாக தீர்மானிக்கலாம் - என்றார்.




# மாயாவதி பற்றி தரக்குறைவான பேச்சு சோனியா காந்தி வருத்தம் தெரிவிப்பு

புதுடெல்லி, ஜுலை 18

உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி குறித்து அந்த மாநில காங்கிரஸ் தலைவர் ரீட்டா பகுகுணா தரக்குறைவாகப் பேசியமைக்கு சோனியா வருத்தம் தெரிவித்தார்.

இதுகுறித்து சோனியா சார்பாக கட்சியின் பொதுச் செயலாளர் ஜனார்தன் திவிவேதி கூறியவை வருமாறு -

உத்தரப் பிரதேசத்தில் நடைபெறும் அரசியல் சம்பவங்கள் அனைத்தும் மிகவும் துரதிர்ஷ்டவசமானவை என்று சோனியா தெரிவித்தார். ரீடா பகுகுணாவின் பேச்சுகளால் அவர் மிகுந்த



வேதனையும், வருத்தமும் அடைந்துள்ளார். முதல்வர் மாயாவதிக்கு எதிராகத் தனிப்பட்ட முறையில் ரீடா பகுகுணா கூறிய வார்த்தைகளுக்கு காங்கிரஸ் கட்சி வருத்தம் தெரிவிக்கிறது.

அனைத்து பெண்களையும் உயர்வாகவே காங்கிரஸ் கட்சி கருதுகிறது. சிறையில் இருந்து ரீட்டா விடுதலை செய்யப்பட்ட பிறகு அவரிடம் கட்சி மேலிடத்தில் இருந்து விளக்கம் கேட்கப்படும் - என்று திவிவேதி தெரிவித்தார்.

# மும்பையில் பொழிகிறது கனமழை: 'பையா' படப்பிடிப்பு தள்ளிவைப்பு

சென்னை ஜூலை 18

மும்பையில் பெய்து வரும் கனமழை காரணமாக 'பையா' படத்தின் படப்பிடிப்பு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

'பீமா' படத்துக்கு பின்னர் லிங்கசாமி இயக்கும் படம் 'பையா'. கார்த்தி, தமன்னா நடித்து வருகிறார்கள். இந்தப் படத்தின் படப்பிடிப்பு மும்பை மழை காரணமாக தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து படத்தின் தயாரிப்பாளர் சுபாஸ் சந்திரபோஸ் கூறியவை வருமாறு -

'பையா' படம் பிரமாண்ட தயாரிப்பு என்பதால் அதிக கால அவகாசம் எடுத்துக் கொண்டோம். 80 சதவீத படப்பிடிப்பு முடிந்து விட்டது. இரண்டு பாடல் காட்சிகளும், சண்டைக் காட்சியும் படமாக்கப்படவுள்ளன.



கதைப்படி சண்டைக்காட்சி மும்பை நகருக்குள் நடக்கிறது. இங்கு படப்பிடிப்பு நடத்த வேண்டும். அதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டோம். ஆனால், இப்போது பொழிந்து வரும் பெரும் மழையால் படப்பிடிப்பு நடத்த முடிவுசெய்திருந்த இடத்தில் மழை நீர் தேங்கி உள்ளது.

இதனால் படப்பிடிப்பை தள்ளி வைத்திருக்கிறோம். சண்டைக் காட்சிக்காக ஹொங்கொங் நாட்டிலிருந்து 10 சண்டைக் கலைஞர்கள் வருகிறார்கள் - என்றார்.

# தமிழகத்தில் 5 தொகுதிகளுக்கு ஒகஸ்ட் 18 இல் இடைத்தேர்தல்

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

புதுடில்லி, ஜுலை 18

தமிழ்நாட்டில் இளையான்குடி, தொண்டாமுத்தூர், கம்பம், பர்கூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய 5 சட்டப்பேரவை தொகுதிகளில் ஓகஸ்ட் 18ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறும் - என்று தேர்தல் கமிஷன் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

இத்தொகுதிகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இம்மாதம் 22 ஆம் திகதி தொடங்குகிறது.

தமிழ்நாட்டில் 5 சட்டப் பேரவை தொகுதிகள் வெற்றிடமாக உள்ளன. முன்னாள் அமைச்சர் ராஜ கண்ணப்பன் இளையான்குடி தொகுதியில் போட்டியிட்டு தி.மு.க. சார்பில் வெற்றி பெற்றார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன், எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு அ.தி.மு.க.வில் சேர்ந்தார்.

தொண்டாமுத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ம.தி.மு.கவைச் சேர்ந்த மு.கண்ணப்பன் கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தி.மு.க.வில் சேர்ந்ததால், எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இன்னொரு ம.தி.மு.க. எம்.எல்.ஏயான கம்பம் தொகுதி ராமகிருஷ்ணனும் தி.மு.க.வில் சேர்வதற்காக எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமாச் செய்தார்.

பர்கூர் தொகுதியிலிருந்து அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற தம்பிதுரை, கரூர் நாடாளுமன்ற தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதையடுத்து, எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமாச் செய்தார். ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. ஊர்வசி செல்வராஜ் (காங்.) மாரடைப்பால் சில நாள்களுக்கு முன் காலமானார்.

இதையடுத்து, தமிழகத்தில் 5 சட்டப் பேரவைத் தொகுதிகள் வெற்றிடமானது. இந்த இடங்களுக்கு 6 மாதங்களில் இடைத் தேர்தல் நடத்த வேண்டும். எனவே, 5 தொகுதிகளுக்கும் இடைத் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தமிழகத் தேர்தல் தலைமை அதிகாரி நரேஷ் குப்தா தொகுதி வாரியாக அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினார். பின்னர் தேர்தல் திகதியை முடிவு செய்து டில்லியில் உள்ள தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பினார்.

அதைப் பரிசீலித்த தேர்தல் ஆணையம் 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் திகதியை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

# பா.ஜ.க. தலைவர் பதவிக்குக் கடும் போட்டி அத்வானி - ராஜ்நாத் ஆதரவாளர்கள் தீவிரம்

பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத்தின் பதவிக்காலம் முடிவடைவதைத் தொடர்ந்து இந்த ஆண்டு இறுதியில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படவிருப்பதால் அப்பதவியைப் பிடிப்பதில் அத்வானியின் ஆதரவாளர்களும், ராஜ்நாத் சிங் ஆதரவாளர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அத்வானி ராஜிநாமாச் செய்யப்போகிறார் எனக் கூறினார். பின்னர் சமாதானமடைந்து பதவியைத் தக்கவைத்துக் கொண்டார். நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்று புதிய நியமனங்களைச் செய்துள்ளார். இந்தச் சூழ்நிலையில் அத்வானியின் கட்டுப்பாட்டில் தான் கட்சி இருக்கிறது எனக் கருதப்படுகிறது. தலைவர் பதவி தன்னை விட்டுப் போனாலும் கட்சியில் தனது பங்களிப்பு முக்கியமானதாக இருக்கவேண்டும் என்று ராஜ்நாத் சிங் கருதுகிறார். இதற்காகத் தனது ஆதரவாளர் ஒருவர் தலைவராக வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

அத்வானியின் ஆதரவாளர்கள் தரப்பில் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜெட்லி, முன்னாள் தலைவர் வெங்கையா நாயுடு அல்லது ஆனந்த்குமார் ஆகியோரில் ஒருவர் தலைவராக வரவேண்டும் என்று விரும்புகின்றனர்.

மக்களவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சுஷ்மா சுவராஜ் அந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு வந்தால் அவரைப் பா.ஜ.க. தலைவராக்கி விடலாம் என்று ராஜ்நாத் சிங் விரும்புகிறார். ஏனெனில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பதவி தனக்குக் கிடைக்கும், அதை வைத்து அத்வானிக்கு அடுத்த இடத்தில் தான் இருப்பதை நிலைநாட்டிக் கொள்ளலாம் என்று அவர் கணக்குப் போடுகிறார். எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையை ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஏ.ஜி.தர்மதாஸ மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சுச் செயலாளர் சுகத கே கம்லத், அரசமைப்பு விவகார அமைச்சுச் செயலாளர் திருமதி மல்காந்தி விக்கிரமசிங்க, ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஏ.ஜி.தர்மதாஸ ஆகியோர் ஆவணங்களைப் பொதுமக்களிடம் இருந்து கையேற்பதைக் காணலாம். கடைசிப் படத்தில் பதிவாளர் நாயகம் ஜி.எம்.

# சுனாமியால் பாதிப்புற்ற பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது ஆவணங்களைப் பெற இந்த நடமாடும் சேவை உதவும்

## நீதியமைச்சின் செயலாளர் சுகத கம்லத் தெரிவிப்பு

நல்லூர், ஜூலை 18

சுனாமியால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான தமிழ்மக்கள் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பலதரப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. குறிப்பிட்ட ஆவணங்களை அவர்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்காக இது போன்று நடமாடும் சேவைகளை எமது அமைச்சின் கீழ் உள்ள சட்ட மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது. முதல் தடவையாக நாங்கள் இந்த நடமாடும் சேவையை இங்கு நடத்துகின்றோம் என நீதி அமைச்சின் செயலாளர் சுகத கே கம்லத் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நடமாடும் சேவையைத் தொடக்கி வைத்துப் பேசிய நீதி அமைச்சின் செயலாளர் சுகத கே கம்லத் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுனாமிப் பாதிப்புக்குட்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்பும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாத மக்களுக்கும், அடையாள அட்டைகள் இல்லாதோருக்கும் அவற்றை தாமதமின்றி வழங்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் சட்ட உதவிகள், வீடமைப்பு ஊழல் தொடர்பான விடயங்கள் போன்றவற்றில் மக்களுக்கு ஏற்படும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எமது இந்தச் சேவைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகள் இணைந்துள்ளன- என்றார். (50-111)

# வடக்கில் கண்ணி வெடி அகற்றும் பணியில் இந்தியாவின் முன்னாள் சிப்பாய்கள்

கொழும்பு, ஜூலை 18

இலங்கையின் வடபகுதியில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் இந்தியாவின் முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்படுவர் என புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்காக நிலக்கண்ணிவெடிகளை அகற்ற உதவுமாறு இலங்கை விடுத்த வேண்டுகோள் தொடர்பாக தற்போது பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்தியாவின் முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் இலங்கையில் ஈடுபடுவர் எனக் குறிப்பிட்டுள்ள இந்திய அதிகாரியொருவர், எத்தனை பேர் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்பது பற்றிய பேச்சுக்கள் இடம்பெறுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

500 பேராவது தேவை என இலங்கை தெரிவித்துள்ளது. எனினும், எத்தனை பேரை அனுப்புவது என்பது குறித்து புதுடில்லியே இறுதி முடிவை எடுக்கும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் தற்போது நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இரு இந்தியக் குழுக்களிலும் முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் இடம்பெற்றுள்ளதுடன், இந்த நடவடிக்கைகளுக்கு முன்னாள் இந்திய இராணுவ அதிகாரிகள் தலைமை வகிக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 'வணங்கா மண்' கப்பலின் இலங்கை முகவர் விடுதலை

கொழும்பு, ஜூலை 18

கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருந்த - 'வணங்காமண்' கப்பலின் இலங்கை முகவர் - ஆறுமுகம் ஆத்மநாதன் நேற்று விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் இவரை நேற்று ஆஜர் செய்த குற்றப் புலனாய்வுப் பொலிஸார், இவரைத் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரிப்பதற்கான குற்றத்தவறு எதையும் இவர் செய்தமைக்கான ஆதாரங்களோ, சந்தேகங்களோ இல்லாததால் அவரை விடுவிக்கலாம் என நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர். அதையடுத்து அவரை விடுவிக்கும் உத்தரவை நீதிமன்றம் விடுத்தது.

விடுதலைப் புலிகளுக்கான பொருள்கள் இந்தக் கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகக் கடற்படை சார்பில் ரியர் அட்மிரல் ஜே.எஸ்.கே. கொலம்பகே, குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்குத் தெரிவித்த தகவலை அடுத்து ஜூன் 4 ஆம் திகதி இந்த முகவர் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து தங்களால் கைது செய்யப்பட்டார் என்றும் - இவ்விடயம் குறித்து 'இன்டர் போல்' வரை தொடர்பு கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் -

அந்த விசாரணைகளில் இவரைத் தொடர்ந்து தடுத்துவைத்து விசாரிப்பதற்கான ஆதாரங்கள், சந்தேகங்கள் கிட்டவில்லை என்றும் - நேற்றுப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (அ-சி)

# இலங்கைக்கு கடன் வழங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் என்பனவற்றில் இலங்கை சிறப்பாக செயற்படுகிறது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தும் நிலை ஏற்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் செனெட்டர் பட்ரிக் லீகி இலங்கை குறித்த இந்த நிபந்தனைகளை முன் வைத்துள்ளார் எனவும், இதன் காரணமாக இலங்கைக்கு விரைவில் சர்வதேச நாணய நிதியக் கடன் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் அற்றுப் போயுள்ளன எனவும் காங்கிரஸ் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### அமெரிக்க காங்கிரஸை அறிக்கை சமர்ப்பிக்கக் கோரிக்கை

மேலும் ஜனவரி முதல் மே மாதம் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து அமெரிக்க காங்கிரஸை அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பட்ரிக் லீகி கேட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வெளிவிவகார நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வெளிநாட்டு இராணுவ நிதி வழங்குதல் திட்டம் எனும் இந்தச் சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட எந்த நிதியும் இலங்கைக்கு உதவியாக வழங்கப்படக்கூடாது. எவ்வித பாதுகாப்பு ஏற்றுமதி அனுமதிப்பத்திரமும் வழங்கப்படக்கூடாது.

இந்தச் சட்டமூலத்திலோ அல்லது வேறு எந்தச் சட்டமூலத்திலோ குறிப்பிட்டுள்ள தன் அடிப்படையில் இலங்கைக்கு இராணுவ உபகரணங்களையோ, - தொழில்நுட்பங்களையோ விற்கக் கூடாது; பரிமாறக்கூடாது.

இலங்கை அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் நிதி ஒதுக்கீட்டு குழுவிற்கு உறுதிப்படுத்தும் வரை திறைசேரி அமைச்சு, இலங்கைக்குக் கடனுதவி வழங்குவதை ஆதரிக்கக்கூடாது.

### வெளிவிவகார அமைச்சர் உறுதி வழங்கக் கோரிக்கை

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறினர் என நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினரை இலங்கை அரசு இடைநிறுத்துகின்றது; நீதியின் முன் நிறுத்துகின்றது என வெளிவிவகார அமைச்சர் உறுதி வழங்க வேண்டும்.

இலங்கையில் ஐ.நா.மனித உரிமை ஆணைக் குழுவை அமைப்பதற்கும் அது நாடு முழுவதிலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் கொழும்பு அனுமதி வழங்கியது என உறுதிப்படுத்தவேண்டும்.

இலங்கை இடம்பெயர்ந்தவர்களை சர்வதேச தராதரத்தின்படி நடத்துகின்றது. அவர்களுடைய நடமாட்டச் சுதந்திரத்தை உறுதி செய்துள்ளது. மோதல் நடைபெற்ற இடங்களுக்கும் மக்களிடமும் செல்வதற்கு மனிதாபிமான அமைப்புகளுக்கும் அனுமதி வழங்குகின்றது என்பன குறித்து வெளிவிவகார அமைச்சு உத்தரவாதம் வழங்கவேண்டும்.

அமெரிக்க திறைசேரி அமைச்சர் சர்வதேச நிதி அமைப்புகளிலுள்ள அமெரிக்க நிறைவேற்று இயக்குநர்களை இலங்கைக்கு எவ்வித கடன் அல்லது வேறு நிதியுதவி வழங்குவதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என அறிவுறுத்தவேண்டும்.

இலங்கை இதற்கான தேவைகளை பூர்த்தி செய்துள்ளது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் [illegible] வரை அவர் இதனை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது.

(அ-சி)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஸ்ரீலங்கா பகவான் ஸ்ரீ சத்தியசாயி அமைப்பின் முன்னாள் ஒருங்கிணைப்பாளரும் ஸ்ரீ சாயிசமித்தியின் வடபகுதியின் ஆரம்பகால கர்த்தாவும் ஓய்வுபெற்ற அரச அதிபருமாகிய அமரர் செல்லையா சிவஞானத்தின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

* * *

நீர்வேலி, அத்தியார் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மாணவ மன்றத் தலைவர் செல்வன் ம.நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ்.மாவட்டச் செயலக கணக்காளர் ச.குகதாசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204-72)

* * *

யாழ்.கல்வி வலய விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (1-72)

* * *

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை தேவாலயத்தின் 188 ஆவது ஆண்டு நிறைவு தோத்திர வழிபாடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகமைக்குரு அருட்திரு என்.அருள்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (1-275)

* * *

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் நூலக வாசகர் களுக்கான பொது அறிவுப் போட்டியினை இன்று சனிக்கிழமை சாவகச்சேரி பொது நூலக மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

# அழைப்புக் கடிதம் கிடைக்காதோருக்கு இன்று நேர்முகப் பரீட்சை

குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகளில் இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதங்கள் பெறாதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று சனிக்கிழமை பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகம் தரலாம் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசப்பா அல்லிமலர்



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் இந்துக் கல்லூரி ஒழுங்கை, உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசப்பா அல்லிமலர் நேற்று (17.07.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசப்பாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமகுரு, காலஞ்சென்ற சின்னத்தம்பி , காலஞ்சென்ற பொன்னம்மா, காலஞ்சென்ற சோதிப்பிள்ளை மற்றும் சங்கரப்பிள்ளை, சிவகுரு ஆகியோரின் சகோதரியும் மகேஸ்வரன், திலகவதி, விக்னேஸ்வரன் (கனடா), ஜெயவதி (கனடா), நகுலேஸ்வரன் (இ.போ.ச.வடக்கு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராதேவி, மோகனராசா, சுபாசினி, கண்ணன், அகிலா ஆகியோரின் மாமியாரும் சிந்தூரி, ரமீதன், ஹரிசா, ஹனிசா, வளவன், மாறன், நேருஷன், ஹிசானிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இந்துக் கல்லூரிஒழுங்கை ,
உரும்பிராய் வடக்கு,

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# 'வணங்காமண்' கப்பல் பொருள்களை அகதிகளுக்கு விநியோகிப்பதில் மீண்டும் சிக்கல்

கொழும்பு, ஜூலை18

'வணங்காமண்' கப்பலில் இருந்து இறக்கப்பட்டு சென்னையிலிருந்து 'எம்.வி. கப் கொலராடோ' மூலம் கொழும்பிற்கு எடுத்து வரப்பட்ட நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் 76 லட்சம் ரூபாவைக் கோரியுள்ளமையைத் தொடர்ந்து அந்தப் பொருள்கள் தொடர்ந்தும் துறைமுகத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டு இன்னமும் அகற்றப்படாமலே உள்ள இந்த நிவாரணப் பொருள்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

'வணங்காமண்' ஏற்பாட்டாளர்களான 'மேர்சி மிஷன்' அமைப்பினரிடம், 'இலங்கையின் ஏழை மக்கள்' மத்தியில் இந்தப் பொருள்களை விநியோகிப்பதற்கு 76 லட்சம் ரூபாவை வழங்குமாறு இலங்கை செஞ்சிலுவைக்குழுவின் தேசிய செயலாளர் நிமால்குமார் கோரியுள்ளார்.

இந்திய செஞ்சிலுவைக்குழு ஊடாகத் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் கோரியுள்ளார் என 'வன்னி மேர்சி மிஷன்' அமைப்பின் இந்தியப் பிரதிநிதியும் சென்னையின் மனிதம் மனித உரிமை அமைப்பின் நிறைவேற்று இயக்குநருமான ஜி.சுப்பிமணியம் தெரிவித்துள்ளார்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களுக்கென இந்த நிவாரணப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கை செஞ்சிலுவைக் குழு அவை 'இலங்கையின் ஏழை மக்களுக்குரியவை' என ஏன் குறிப்பிட்டுள்ளது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இன்னுமொரு நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்குப் பெருமளவு பணத்தைக் கோரும் இலங்கைச் செஞ்சிலுவைக் குழுவிற்கும், பணத்தை நோக்கமாகக் கொண்டவர்களுக்கும் இடையில் எந்த வித்தியாசத்தையும் தாம் காணவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

## ஐ.தே.கவின் முக்கிய பொறுப்புகள் ஜயலத் எம்.பிக்கு வழங்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 18

ஐ.தே.கவின் சர்வதேச நடவடிக்கைகள், வடக்கு புனரமைப்பு வேலைத்திட்டங்கள், மனித உரிமைகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் போன்ற விடயங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 15 ஆம் திகதி ஸ்ரீகோத்தா மத்திய நிலையத்தில் ஐ.தே.கவின் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது ஜயலத்திற்கு குறித்த பொறுப்புகளையும் பகிர்ந்தளிக்கும் கடிதம் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டது. (சி)

## நாடு திரும்பினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட இம்மாநாட்டுக்கு சென்றிருந்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் உட்பட 8 உலகத் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அணிசேரா அமைப்பின் தலைமைப் பதவியிலிருந்து விலகிச் செல்பவரும் கியூபாவின் ஜனாதிபதியுமான ராகுல் காஸ்ட்ரோ, லிபியத் தலைவர் கேர்ணல் முஹம்மது அல் கடாபி, பாகிஸ்தான் பிரதமர் யூசுப் கிலானி, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜெகப் ஸுமா, இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங், மலேசியப் பிரதமர் அப்துல் ரஸாக் மற்றும் நேபாளப் பிரதமர் மாதேவ்குமார் ஆகிய உலக நாடுகளின் தலைவர்களுடனே ஜனாதிபதி சந்திப்புக்களை நடத்தினார். (சி)

## வடக்கின் வசந்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.சிவசுவாமி உட்பட அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு நிகழ்வில் ஆளுநர் உரையாற்றுகையில் -

வடக்கை அபிவிருத்தி செய்ய, மீளக் கட்டியெழுப்ப வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தை ஜனாதிபதி அறிமுகப்படுத்தியுள்ளார். அத்திட்டம் வெற்றிபெற அதிகாரிகள் முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கவேண்டும். ஆளுநர் என்ற வகையில் வேண்டிய ஒத்துழைப்பை நான் வழங்குவேன்.

மாகாண சபையில் பணிபுரியும் சகலரும் இதன்பொருட்டு ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் -என்றார். (அ-1-150)

## குடாநாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றுக்குத் தெரிவிக்குமாறு அரச சட்டத்தணிக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேற்படி குடாநாட்டுப் பயணிகள் குடாநாட்டை விட்டு வெளியேறுவதற்குப் பாதுகாப்புப் படையினரின் முன் அனுமதி பெறவேண்டும் எனக் குறிப்பிட்டு, அந்தப் பயண அனுமதிக்கு சுமார் இரண்டு மாத காலம் காத்திருக்க வேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டி, அந்தக் கெடுபிடியை ஆட்சேபித்து, உயர்நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான அ.விநாயகமூர்த்தி அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணையின் போதே மேற்படி அவசரப் பயணிகளுக்காவது, இந்தக் கால இழுத்தடிப்புக் கெடுபிடியைத் தளர்த்த முடியுமா என்பதை அரசுத் தலைமையிடம் கேட்டறிந்து நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துமாறு அரசுத் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ராஜீவ் குணதிலகவிடம் நீதிமன்றம் பணித்தது.

பிரதம நீதியரசர் அசோக என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, சந்திரா ஏக்கநாயக்கா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர் விநாயகமூர்த்தி சார்பில் அவரே ஆஜராகி வாதாடினார்.

''திருகோணமலையிலோ, மட்டக்களப்பிலோ அல்லது பிற பிரதேசங்களிலோ உள்ள மக்கள் கொழும்புக்கு வருவதற்கு இத்தகைய பயண முன் அனுமதி பெறவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குடாநாட்டு மக்களுக்கு மட்டுமே இந்தக் கெடுபிடி நடவடிக்கை. அது மட்டுமல்ல. அவசரமாகக் கொழும்பு வரவேண்டிய பயணிகள் கொழும்பில் தாங்கள் தங்கவிருக்கும் வீட்டின் முகவரி, குடும்பத் தலைவர் பெயர் எல்லாம் முதலிலேயே படையினரிடம் தெரிவித்து விடவேண்டும். அவர்கள் கொழும்பில் அதனை ஆராய்ந்து, விசாரித்து, உறுதிப்படுத்தி, மேற்படி நபர் கொழும்பில் வந்து தமது வீட்டில் தங்குவதற்கு வீட்டுக்காரர் இணங்குகின்றாரா என்பவை எல்லாவற்றையும் கண்டறிந்த பின்னரே - சுமார் 2 மாத கால இழுபறியின் பின்பே - அனுமதி வழங்கப்படுகின்றது.'' - என்று சுட்டிக்காட்டினார் விநாயகமூர்த்தி.

இந்த வாதத்தை செவிமடுத்த நீதியரசர்கள் அவசரப் பயணிகள் விடயத்திலாவது இந்தக் கெடுபிடியைத் தளர்த்த முடியுமா என்பதை அரசுடன் கலந்துரையாடி நீதிமன்றுக்குத் தெரிவிக்குமாறு அரச சட்டத்தரணியைப் பணித்து, வழக்கை நவம்பர் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக இராணுவத் தளபதி, யாழ். படைகளின் தளபதி, பாதுகாப்புச் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-சி)

# ஊதிய அதிகரிப்புக் கோரி மின்சாரசபை ஊழியர்கள் நேற்று கொழும்பில் சுகயீன விடுமுறைப் போராட்டம்

கொழும்பு, ஜூலை 18

ஊதிய அதிகரிப்புக் கோரி, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்று கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் மழைக்கும் மத்தியிலும் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் சில பிரதேசங்களில் மின்சார தடை ஏற்படக் கூடும் எனத் தொழிற்சங்கத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு மின்சாரத் தடை ஏற்பட்டால் அது உடனடியாக சீர்செய்யப்பட மாட்டாது என்பதால், மின் தடைத் தொடர்ந்தும் நீடிக்கலாம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இலங்கை மின்சார சபை ஊழியர்களின் ஊதியம் அதிகரிக்கப்படும். எனினும் இந்த முறை ஊதியங்கள் இதுவரை அதிகரிக்கப்படவில்லை. ஊதிய அதிகரிப்பு வழங்கப்படாவிட்டால், ஒரு நாள் பணிப்புறக்கணிப்பு, தொடர்பணிப்புறக்கணிப்பாக மாறும் எனவும் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

அண்மையில் நாவலப்பிட்டியில் மின் பொறியியலாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மூவரையும் கைது செய்யுமாறும் தொழிற்சங்கங்கள் கேட்டுள்ளன. (அ-சி)

## யாழ்.படைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் மென்டகு சமர சிங்க இராணுவத்தின் பிரதம அதிகாரியாக நாளை மறுதினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு இராணுவத் தலைமையகத்தில் பிரதி பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிவரும் மேஜர் ஜெனரல் ஜி.பி.ஆர்.டி. சில்வா 23 ஆம் திகதி முதல் மாற் றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 51 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் பி.ஜயசுந்தர படைகளின் திட்டமிடல் பிரிவு பணிப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார்.

யாழ். நகர கொமடோராகப் பணியாற்றிய பிரிகேடியர் ஆர். குலதுங்க கொழும்பு தலைமையகத்துக்கு நாளை மறுதினம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளார். அவரது இடத் துக்கு கேணல் ஹேமந்த குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். (அ-1)

## யாழ்., ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கைக்கான சர்வதேச பத்திரிகை சுதந்திரக் குழுவினரே இந்தவேண்டுகோளை விடுத்துள்ளனர்.

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, எல்லைகளற்ற செய்தியாளர் குழு உட்பட எட்டு அமைப்புகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள பகிரங்கக் கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஊடக சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் குறித்த சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் அனைத்து பத்திரிகையாளர்களும் பாதுகாப்பாகப் பணிபுரிவதற்கான வலுவான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறிப்பாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டமை, தாக்கப்பட்டமை போன்றவை குறித்து விசாரணை செய்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் முழுமையான அதிகாரத்தைக் கொண்ட விசேட விசாரணை அலுவலகம் அமைக்கப்பட வேண்டும். சட்டத்தின் பிடியிலிருந்து விதிவிலக்களிக்கப்படுதலுக்கு எதிரான போராட்டத்திற்கு இது அவசியம். பத்திரிகைச் சுதந்திரக் குழுவினர் தமது கடிதத்தில் மேலும் கேட்டுள்ளனர். (அ)

## லயன்ஸ் ஏற்பாட்டில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றும் விஞ்ஞான, கணித பிரிவு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கை யாழ். லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

நாளைமறுதினம் திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி முதல் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

சகல மாணவர்களும் பாடசாலைச் சீருடையுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1)

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிமனைகள் அனைத்தும் நேற்று முதல் மக்களுக்கான சேவையை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளன - என்று செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் திருகோணமலை மாவட்ட பணியகத்தினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, மூதூர் மற்றும் அக்கரைப்பற்று பணிமனைகளே இவ்வாறு தமது சேவையை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் 1991ஆம் ஆண்டு முதல் திருகோணமலை மாவட்டத்தில் தமது பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி-6)

## தமிழர்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டி. ராஜா, இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுகள் தொடர்பாக விவரங்களைக் கேட்டார். இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் கிடைக்குமா என்பது குறித்தும் அவர் சந்தேகம் எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சின்போது போரினால் இடம்பெயர்ந்து 33 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் 3 லட்சம் இலங்கைத் தமிழ் மக்களின் நிலை குறித்து கவலையை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

அந்த மக்களுக்குத் தேவையான, அர்த்தமுள்ள அனைத்து நிவாரண மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும் என தாம் வலியுறுத்தினார் எனவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

அதேநேரத்தில், அது வெறும் ஆரம்பம்தான் என்றும், இலங்கைத் தமிழ் மக்களின் கௌரவம் மற்றும் சுயமரியாதையைக் காப்பதை அடிப்படையாகக் கொண்ட அரசியல் நடைமுறைகளை இலங்கை அரசு ஆரம்பிக்க வேண்டும் என்றும், அதிகாரப் பரவலுக்கு வகை செய்யும் 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக அது இருக்க வேண்டும் என்றும் மன்மோகன் சிங் சுட்டிக்காட்டினார். (அ)

வெளிவந்துவிட்டது
(Speed Marketing)
புலமைப்பரிசில் வினாத்தாள் - 2009 (July)
14 வினாத்தாள்கள் விடையுடன்
அகில இலங்கை ரீதியில் சிந்தனை வட்டத்தால் நடத்தப்படும் மாதிரி வினாத்தாள்
ஆக்கம் புண்ணியாமீன், மஸீதா புண்ணியாமீன்
ஏக விநியோகத்தர் -
அன்னை புத்தகசாலை
இல.7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881

GROUP CLASSES
பலாலி றோட் (அப்பலோ வைத்தியசாலை அருகில்)
மீண்டும்...
தமிழ் -
திரு.சுரேஸ் (B.A.)
பொருளியல் -
திரு.தயாபரன் (B.A.)
GAQ/B.A. part 1/ B.A. final
யாழ். - பேரறிஞன்
ஆரம்பம் - 17.07.2009
நாளை 9 மணி

வெளிவந்துவிட்டது
ENGLISH MEDIUM
O/L - past paper
Maths - 8 - years
Science - 8 - years
மற்றும்
தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளுக்குரிய சகல English Medium புத்தகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
அன்னை புத்தகசாலை
இல.7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.